Registered as a Newspaper    பக்கங்கள் 6    விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்கள் தினசரி · PEOPLES DAILY

## இரவு 9 மணிவரைகடைகளை திறந்து வியாபாரம் செய்ய கோரிக்கை

சனி ஞாயிறு பொது விடுமுறை தவிர்ந்த ஏனைய தினங்களில் இரவு 9.00 மணிவரை வர்த்தக நிலையங்களைத் திறந்து வியாபாரம் செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இது குறித்து யாழ். மாவட்ட அரசியல் துறையினர் விடுத்த செய்திக்குறிப்பில் வர்த்தகர்கள் தாம் விரும்பும் பட்சத்தில் தமது வர்த்தக நிலையங்களைச் சனி, ஞாயிறு, பொது விடுமுறை தினங்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் இரவு 9.00 மணிவரை பொதுமக்களின் நலன்கருதி திறந்து வியாபாரம் செய்யுமாறு (6 ஆம் பக்கம் பார்க்க)

நாதம் 5    திருவள்ளுவர் ஆண்டு 2025    ஐப்பசி 28    14-11-94    திங்கட்கிழமை    ஓசை 269

### குடாநாட்டில் வயிற்றோட்டம்

(யாழ்ப்பாணம்)
யாழ். குடாநாட்டில் வயிற்றோட்ட நோய் பரவி வருகிறது.

அண்மைக் காலமாக யாழ். போதனா வைத்தியசாலையில் பெருமளவான வயிற்றோட்ட நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குடிதண்ணீர் அசுத்தமாக இருப்பதால் இந் நோய் பரவுவதாகவும் கொதிக்கவைத்து ஆறிய நீரை குடித்தால் இந் நோயை பெருமளவு கட்டுப்படுத்த முடியும் என யாழ் போதனா வைத்தியசாலை வைத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன [இ. நி]

### வடக்கு - கிழக்குப் பிரச்சினை

# தீர்விற்கு யோசனை கைவசமுண்டு; உரிய நேரத்தில் வெளியிடத் தயார்

## ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவிப்பு

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு பிரச்சினையை தீர்த்து வைப்பது குறித்து யோசனைகள் எம்மிடம் உள்ளன. உரிய நேரத்தில் அவற்றை வெளியிடுவோம் என ஜனாதிபதி சந்திரிகா நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

ஜனாதிபதியாகப்பதவியேற்ற பின்னர் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் செய்தியாளர் ஒருவர் இனப்பிரச்சினை தீர்வு திட்டம் எதுவும் உங்களிடம் உண்டா என்ற கேள்விக்குப் பதில் அளிக்கையிலேயே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இவ்வாறு தெரிவித்தார்.

பத்திரிகையாளர்களின் பல கேள்விகளுக்குப் பதில்அளித்த ஜனாதிபதி சந்திரிகா வழங்கிய பதில்களில் ஒரு சில வற்றை இங்கே தருகிறோம்.

கேள்வி: காமினி திசாநாயக்காவின் கொலை குறித்த விசாரணை விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களை பாதிக்குமா?

பதில்: பேச்சுவார்த்தையும், புலன்விசாரணையும் இருவேறு விடயங்கள். புலன் விசாரணை உரியவகையில் நடக்கும். அதேசமயம் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கு தயங்கமாட்டோம்.

கேள்வி: ஜனாதிபதி ஆட்சிமுறை அடுத்த ஆண்டு இரத்து செய்யப்படுமா?

பதில்: எமது கொள்கையில் மாற்றமில்லை, எதை கூறினோமோ அதை செய்வோம்.

# சந்திரிகாவின் அமைச்சரவை இன்று பதவிப் பிரமாணம்

## அலரி மாளிகையில் பதவி ஏற்பு வைபவம்

(கொழும்பு)
ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசின் பிரதமரும் அமைச்சர்களும் இன்று பதவிப்பிரமாணம் செய்து கொள்வர் இன்று காலை அலரி மாளிகையில் பதவி ஏற்பு வைபவம் இடம்பெறும்.

இவ் வைபவம் காலை ஆறு மணிக்கு நடைபெறலாம் என பி.பி.ஸி. அறிவித்துள்ளது.

முதலில் பிரதமரும் பின்னர் அமைச்சர்களும் ஜனாதிபதி சந்திரிகா முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொள்வர். புதிய ஜனாதிபதியாக சந்திரிகா பதவி ஏற்றதால் அரசியல் யாப்பிற்கமைய அமைச்சரவைகலைக்கப்பட்டது. இதன்காரணமாகவே மீண்டும்அமைச்சரவை பதவிப்பிரமாணம் செய்யவுள்ளது.

பிரதமராக சிறிமாவோ நியமிக்கப்படும் பட்சத்தில் அவர் இன்று தனது மகளான ஜனாதிபதி சந்திரிகா முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொள்வது குறிப்பிடத்தக்க அம்சமாக இருக்கும்.

# அமைச்சரவையில் மாற்றம் எதுவும் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை

(கொழும்பு)
அமைச்சரவையில் மாற்றம் எதுவும் ஏற்பட வாய்ப்பு எதுவுமில்லை என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பத்திரிகையாளர் கேள்வி ஒன்றிற்குப் பதில் அளிக்கையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அமைச்சரவையில் மாற்றம் எதுவும் ஏற்படுமா என்று பத்திரிகையாளர்ஒருவர் கேட்டதற்கு அப்படி எதுவுமில்லை என ஜனாதிபதி பதிலளித்தார்.

மேலும், பிரதமராகத் தாயரின் பெயரைத் தானே பிரேரித்ததாகவும், அந்த நியமனத்தைச் செய்ததாகவும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றமை பெரும் பொறுப்புக்களைத் தனக்கு வழங்கியுள்ளதாகக் குறிப்பிட்ட சந்திரிகா குமாரதுங்காவிடம் உங்கள் சகோதரர் அநுராவிற்கு என்ன கூற விரும்புகிறீர்கள் எனக் கேட்டதற்கு மந்த புத்தி உள்ளவர்களிடம் பேச்சுக் கொடுக்க நான் விரும்பவில்லை எனச் சிரித்துக் கொண்டே கூறினார்.

## சுபவேளை இன்மையால் பதவிஏற்பு ஒத்திவைப்பு

(கொழும்பு)
சிறிலங்காவின் புதிய பிரதமராக சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்று பதவிஏற்பதாக இருந்த போதிலும் சாத்திரப்படி நாள் நல்லதாக இல்லை என ஜோசியர்கள் கூறியதாலேயே அவரது பதவி ஏற்பு இன்று வரை ஒத்திவைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்காவின் பொதுத் தேர்தல் அண்மையில் நடைபெற்ற போது சந்திரிகா குமாரதுங்க பிரதமராக தெரிவு செய்யப்பட்டார், இதனை அடுத்து கடந்த 9-ம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட அவர் வெற்றிபெற்று ஜனாதிபதியாகத் தெரிவானார். இதனை அடுத்து இவர் வகித்த பிரதமர் பதவி காலியானது

[6ஆம் பக்கம் பார்க்க]

## அவசரகாலச் சட்ட நீடிப்பு பாராளுமன்றில் விவாதம்

[கொழும்பு]
சிறிலங்கா பாராளுமன்றம் இன்று மாலை கூடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் அவசரகாலச்சட்டத்தை நீடிப்பதற்கு அனுமதி கோரப்படவுள்ளதாக தெரியவருகிறது.

திருமதி சந்திரிகா குமாரதுங்கா ஜனாதிபதியாகப் பதவி ஏற்றபின் இன்று முதற்தடவையாக பாராளுமன்றம் கூடவுள்ளமை குறிப்பிடத்தக்கது

# புலிகளுடன் அடுத்தபேச்சு எப்போது? அறிவிக்கும் நிலையில் இல்லையாம்

(கொழும்பு)
விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தை எப்போது மீண்டும் ஆரம்பமாகும் என்ற காலவரையறையை அறிவிக்கும் மனநிலையில் தற்போது தான் இல்லை என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் ஒத்திவைக்கப்பட்டனவே தவிர நிறுத்தப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

# ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விரைவில் இந்தியா செல்லசிட்டம்

(கொழும்பு)
சிறிலங்காவின் புதிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விரைவில் இந்தியாவிற்கு விஜயம் செய்யவுள்ளார் என அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

நேற்று முன்தினம் சிறிலங்காவின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட நான்காவது ஜனாதிபதியாக பதவிஏற்றசந்திரிகா குமாரதுங்கா நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் இது குறித்தருசகமாக தெரிவித்ததாக அவ் வட்டாரங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

### பாபபரசருக்கு சுகயீனம்

பாப்பரசர் றோம் நகரில் நோய்வாய்ப் பட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

உலக கத்தோலிக்க மக்களின் தலைவர் பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் நோய்வாய்ப்பட்டுள்ளதால் நடப்பதற்கு மிகவும் கஷ்டப்படுவதாகவும் இவர்

[6ஆம் பக்கம் பார்க்க]

# அதிகாரப் பரவலாக்கல் குறித்து தெளிவான கொள்கை இல்லை

## ஐ.நா. அரசியல் நிபுணர் ராம் மாணிக்கலிங்கம்

(கொழும்பு)
வடக்கு - கிழக்குப் பகுதிக்கு எவ்வளவு தூரம் அதிகாரங்களை வழங்கக்கூடிய நிலை உள்ளது? என்பது குறித்து இன்னும் ஒரு தெளிவில்லாத நிலையேயுள்ளது. ஆனால் யுத்தத்திற்கு அரசியல் தீர்வொன்று அவசியம் என பிரபல அரசியல் நிபுணர் ராம் மாணிக்கலிங்கம் தெரிவித்துள்ளார். இவர் ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் பிரிவில் அரசியல்துறை நிபுணராக கடமைபாற்றுகிறார்.

நேற்று லண்டன் பி.பி.ஸியின் சிங்கள சேவைக்கு அவர் அளித்த பேட்டியில் மேற்படி கருத்தைக் கூறினார். மேலும் சமாதானம் தொடர்பான நடவடிக்கையில் புதிய அரசாங்கம் பல இன்னல்களை எதிர் நோக்க வேண்டிவரும்.

அரசாங்கம் தீர்வொன்றை நோக்கி எந்த வழியில் பேச்சுக்களை நடத்த வேண்டும்? அரசாங்கத்தினால் வழங்கக்கூடிய அதியுயர் அதிகாரம் என்ன? உரிமைகள் எவை? அவை எந்த ரீதியில் வழங்கப்பட வேண்டும் என்பது குறித்து ஒரு தெளிவில்லாத கொள்கையில் உள்ளது.

[6 ஆம் பக்கம் பார்க்க]

### போரினால சலிபபு

(கொழும்பு)
நீண்டகாலப் போரினால் மக்கள் சலிப்படைந்து விட்டதையே நடந்து முடிந்த தேர்தல் காட்டுகிறது என ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பாளர்களில் ஒருவர் தெரிவித்தார்.

பங்களாதேஷில் இருந்து வந்த முன்னாள் வெளிநாட்டு அமைச்சரான கலாநிதி கமல் குஷைன் இதைத்தெரிவித்தார். இவர் கொழும்பு மாவட்ட

[6ஆம் பக்கம் பார்க்க]

# புலிகளுடனான சமாதானப்பேச்சு அரசாங்கம் தொடரவேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில்

(கொழும்பு)
காமினி திசாநாயக்காவின் கொலை இடம் பெற்றுள்ள போதிலும் சமாதான முயற்சிகள் பாதிப்படையாது தொடர வேண்டும் என எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

நான் முன்னர் பாராளுமன்றத்தில் கூறியது போன்று புதிய அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்களை நாம் எதிர்க்கவில்லை பேச்சுக்கள் வெளிப்படையாக நடைபெற வேண்டும் என்றார்.

# கிழக்கில் 30 ஆயிரம் குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிப்படைந்தன

## 15 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் அகதிகளாயினர்

(கொழும்பு)
கிழக்கு மாகாணத்தில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன அம்பாறையில் 15 ஆயிரத்திற்கும் அதிகமானோர் அகதிகளாகியுள்ளனர் ஆலையடி வேம்பு, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, திருக்கோயில் போன்ற பகுதிகள் வெள்ளத்தால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன.

பல வீதிகள் கிழக்கில் நீரில் மூழ்கியுள்ளன மட்டக்களப்பில மஞ்சந்தொடுவாய் நாவற்குடா பகுதிகளும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. தற்போது வெள்ளம் வடிந்து வருகிறது காலநிலையும் சீராகியுள்ளது

## வரி விளம்பரம்

**யாழ் நூலகத்தை எரித்த கதையை**

'அக்கரைச்சீமையில்' நாவலின் வாசியுங்கள் 250 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை தனது 45 வருடகால இலக்கிய அநுபவத்துடன் கதை சொல்கிறார் லண்டன் கதை 105 பாகங்கள்- [9928]

**விசேட கழிவு**

இலகு தோசை மா, இட்டலி மா, அப்பம் மா ஆகியவற்றை எம்மிடம் மொத்தமாகக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் முன் கூட்டியே ஒழுங்கு செய்து விசேட கழிவைப் பெற்றுக் கொள்ளுங்கள் தொடர்பு: சகல அன்னா தொழிலக இளைகளிலும் (சி - 10676)

## பரிசளிப்பு விழா

(நல்லூர்)

யாழ். புனித சம்பத்திரிசியார் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா வைபவம் எதிர்வரும் புதன்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரியின் மத்தியூஸ் மண்டபத்தில் நடைபெற உள்ளது.

யாழ் ஆயர் பேரருட்திரு. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெற உள்ள இந்நிகழ்வில் மன்னார் ஆயர் பேரருள்திரு. ஞானானந்தன் யோசப் ஆண்டகை அவர்கள் முதன்மை விருந்தினராக கலந்து கொள்ள உள்ளார். (17)

## தொல்புரம் சந்தை மீண்டும் இயங்குகிறது

(தொல்புரம்)

சிலவருடங்களாக இயங்காமல் இருந்து வந்த தொல்புரம் மத்திய சந்தை மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

வலிமேற்கு பிரதேசத்தில் உள்ள சந்தைகளில் பழமை வாய்ந்த சந்தை எனவும், ''மூட்டுச் சந்தை'' என பலராலும் அழைக்கப்படும் மேற்படி சந்தை நேற்று முன்தினம் முதல் மீண்டும் இயங்க வைக்கப்பட்டுள்ளது.

இந்திய இராணுவத்தினரின் வருகையை அடுத்து இந்த சந்தைக்கு விற்பனைக்காக வரும் மீன்கள், மரக்கறி வகைகள் தடைப்பட்டதனாலும், அங்கு குறித்த காலங்களில் சந்தை கூடியும், அந்த வேளைகளில் மக்கள் பல இடங்களில் இடம்பெயர்ந்து போயிருந்த காரணத்தினாலும் சந்தை கூடும் முயற்சி படிப்படியாக கைவிடப்பட்டது.

மேலும் இந்த நிலை தொடர்வதை அவதானித்த பாவனையாளர்களும், விற்பனையாளர்களும் மேற்படி சந்தையை இயக்கி வைக்குமாறு வலிமேற்கு பிரதேச சபை விசேட ஆணையாளர் திரு கா. சந்திரராசா அவர்களிடம் கோரியதை அடுத்து அவர் எடுத்துக் கொண்ட தரித முயற்சியினால் இந்த சந்தை இயங்க வைக்கப்பட்டுள்ளது. (41)

## கணனிகள் அறிமுக பயிற்சி

(யாழ்ப்பாணம்)

கணனி அறிமுகப்பயிற்சி நெறிஒன்று திறந்த பல்கலைக்கழக யாழ்-பிராந்திய நிலையத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது-

மேற்படி கற்கைநெறிக்கு கணனித்துறையில் ஆரம்ப விழிப்புணர்வைப்பெற விரும்புபவர்கள் மற்றும் ஆர்வம் உள்ள இருபாலாரும்விண்ணப்பிக்க முடியும்-

இக்கற்கைநெறி விரைவில் மேற்படி பிராந்திய நிலையத்தில் ஆரம்பிக்கப்படவிருப்பதால் அதற்கான விண்ணப்பங்கள் காலக்கிரமத்தில் கோரப்படவுள்ளது-

இதற்கு முன்னோடியாக இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க இருப்பவர்களது விபரங்களை திறந்த பல்கலைக்கழக யாழ்-பிராந்திய நிலையம் சேகரித்து வருகிறது எனவே விண்ணப்பிக்க விரும்பும் சகலரையும் தமது பெயர் விபரங்களை இப்பிராந்திய நிலையத்தில் பதிவு செய்யும்படி பிராந்திய இயக்குனர் திரு-ச-ஆ-ஞானேந்திரன் கேட்டுள்ளார்- [௧]

# மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு மூலவள நிலையத்தால் அதிகபயன்

வெ. இளங்குமரன்

(வடமராட்சி)

எமது சமுதாயத்திற்கு கணிதம் முக்கியம் கல்வி அறிவு விலைமதிக்க முடியாத ஒன்று கடந்த காலத்தில் கணிதத்தில் தலை சிறந்த மாவட்டமாக இருந்த யாழ். மாவட்டம் தற்போது தரம் குன்றி காணப்படுகிறது:

வடமராட்சிக் கல்விக் கோட்ட கணித மூலவள நிலையத்தினரின் ஓராண்டு நிறைவு விழா கடந்த வெள்ளிக்கிழமை கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் கரவெட்டி கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. சிவராசா தலைமையில் நடைபெற்றபோது முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட தமிழீழ கல்விப்பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் முன் கண்டவாறு தெரிவித்தார்.

இந் நிகழ்வுக்கு முன் ஆரம்பத்தில் மங்கள விளக்கு ஏற்றலுடன் தேசியக் கொடியை தமிழீழக் கல்விக் கழக பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரனும் பாடசாலைக் கொடியை கரவெட்டி கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர். திரு. சி. சிவராசாவும் ஏற்றி வைத்தனர்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில், கடந்த காலத்தில் கணித பாடத்தில் இம் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் தலை சிறந்து காணப்பட்டனர் தற்போது தமிழீழ பொதுக்கல்வி பரீட்சையின் மூலம் கணித பாடத்தின் தரம் குறைவடைந்திருக்கிறதை அறியக்கூடியதாகவுள்ளது:

கணித பாடத்தில் தேர்ச்சி குறைந்த மாணவர்களுக்கு கணித மூலவளம் ஒரு வழிகாட்டி கணித மூலவள நிலையத்தின் மூலம் மாணவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் ஏற்படும் கற்பித்தல் முறையானது கணித மூலவள நிலையத்தில் மட்டும் தங்கியிருக்காது பாடசாலை மட்டத்திலும் கணித மூலவள செயற்பாடு பரவலாக்கப்பட வேண்டும்.

பாடசாலை மட்டத்தில் பரவலாக்கப்படும்போது மெல்லக்கற்கின்ற மாணவர்களுக்கு அதிக பயனைக் கொடுக்கும். மாணவர்கள் பலர் பலனடைவர் கணித பாடம் பரீட்சைக்கு மட்டும் தங்கியிருக்காமல் தமது அன்றாட வாழ்வின் தேவைக்கும் பயன்படும் இதனை நாம் உணர்ந்து மாணவர்கள் மத்தியில் கணிதத்தை கற்பிக்க வேண்டும்; கசப்பானவற்றை இனிப்பாக மாற்றும் பயன்பாடு கணித மூலவளத்திற்கு உண்டு. இந்த மூலவளத்தை பயன்படுத்தி மாணவர்களை கணிதத்தில் தேர்ச்சி பெற வைக்க முடியும் கணித பாடத்தின் வீழ்ச்சிக்கு பல்வேறு காரணங்கள் இருந்திருக்கின்றன. கணித பாடத்தின் தரத்தை உயர்த்த சகலரும் தன்னால் இயன்ற முயற்சியை எடுக்க வேண்டும்; எமது கழகம் தொடர்ந்தும் மாணவர்களுக்கு ஆதரவு வழங்கும் என்றார்.

முதன்மை விருந்தினரில் மற்றொருவரான வலயம்-2 கல்விப் பணிப்பாளர் திரு க. கந்தசாமி உரையாற்றும் போது, கணித எண்ணக்கருவை கீழ் வகுப்பில் கற்றுக் கொடுத்து கணித பாடத்தின் அறிவை மாணவர்கள் மத்தியில் வளர்க்க வேண்டும். சிறு சிறு விடயங்களை பெரிதாக்கி விடக் கூடாது ஒரு பரீட்சை பெறுபேற்றில் சித்தியடையாத மாணவர்கள் மீது கவனம் செலுத்த வேண்டும்- பரீட்சை பெறுபேறுகளை பெரிதாக்கி விடக் கூடாது-

கல்வித் தரம் குறைந்த மாணவர்களுக்கு கணித மூலவள நிலையத்தின் மூலம் தரத்தை உயர்த்த வேண்டும். கணித பாடத்தில் தேர்ச்சி இல்லாமல் மேல் வகுப்புக்களில் கல்வி கற்பது கடினம் ஒரு பரீட்சை பெறுபேற்றில் கணித பாடம் சித்தியடையாது விட்டால் மாணவர்களுக்கு கால் முறிந்தது போலாகும்; கல்வி மாணவர்களுக்குச் சேரவேண்டுமானால் மாணவர்கள் ஆசிரியரை மதிக்கவேண்டும்.

இந்த மண்டபத்தில் காணப்படுகின்ற கணித கோலங்கள் கணித உணர்வை உண்டுபண்ணுகின்றன- மாணவர்கள் கல்வியில் தேற ஆசிரியர்களின் ஊக்கம் தான் முக்கியம்

தொடர்ந்து மூலவள நிலைய பொறுப்பாளர் திரு. இராமகிருஷ்ணன் பாடசாலை மாணவி செல்வி பிறேமவதி மாணவன் கோகுலதாசன் ஆசிரியர்கள் சார்பில் கணித வள ஆசிரியர் திரு மகாதேவன், கணித முதன்மை ஆசிரியரும் ஆசிரிய ஆலோசகருமான திரு செபரட்ணம், உடுப்பிட்டி அமி கல்லூரி அதிபர் திரு. என். அனந்தராஜ், வலயம்-2 கணித மூலவள உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம், தெ ப பொ. கூ முகாமையாளர் திரு சிவநேசன் ஆகியோரும் உரையாற்றினர்.

வரவேற்புரையை பாடசாலை அதிபர் திரு. க. பொன்னையாவும்: நன்றியுரையை திரு. கி. சிவராசாவும் நிகழ்த்தினர். தொடர்ந்து ''ஒரு மனிதனின் வாழ்க்கையுடன் இணைந்து செயல்படுவதில் கூடிய பங்கை வகிப்பது எண் கணித அறிவா? க்ஷேத்திர கணித அறிவா? என்னும் பொருளில் பட்டிமன்றம் இடம் பெற்றது மூலவள நிலையத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களும் கௌரவிக்கப் பட்டனர். (யோ)

## மாதாந்த கூட்டமும் கலைநிகழ்வும்

நாவலி பயூரன் குடியிருப்பில் இயங்கும் சிறுவர் போசாக்கு பராமரிப்புப் பூங்காவின் மாதாந்த கலை நிகழ்வும் கூட்டமும் அண்மையில் பூங்கா அரங்கில் நடைபெற்றன: விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் திவக கோட்ட வேலைத்திட்டப் பொறுப்பாளர் செல்வி நிஷாந்தினி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மங்கள விளக்கினை யாழ் மாவட்ட மகளிர் சிறுவர் பாதுகாப்புத் திட்டப் பொறுப்பாளர் செல்வி துளசி ஏற்றி வைத்தார். மகளிர் அமைப்பின் வெளியீட்டுப் பிரிவைச் சேர்ந்த செல்வி சுதாமதி, மானிப்பாய் ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. செல்வராஜா, கிராமசேவையாளர் திரு உலகநாதன், பூங்கா ஆசிரியை பெ. முத்தழகி ஆகியோரின் சிறப்புரைகளுடன் பூங்கா சிறார்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (22)

## கணித விஞ்ஞான முன்னோடிப்பரீட்சை

மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் முகமாக வாரிவளவு நல்லியக்கச் சபையினரால் கணித விஞ்ஞான முன்னோடிப் போட்டிப் பரீட்சைகள் நடாத்தப்படவுள்ளன-

எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை கணித பாடமும், 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விஞ்ஞானப் பாடமும் 1994 க- பொ-த சாதாரணம் வகுப்பு மாணவர்களுக்கு காலை 8மணியளவில் யாழ் நாவலர் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும் (41)

## சமாந்தர சைக்கிள் சவாரி காவல்துறை நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர்ப் பகுதியில் தற்போது பக்கம் பக்கமாக சைக்கிள்களில் செல்வோர் தமிழீழ காவல் துறையின் போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவினரால்பிடிக்கப்பட்டு தடுத்து வைக்கப் படுவதுடன் அபராதமும் அறவிடப்படுகின்றது. வீதிப் போக்குவரத்திற்கு இடைஞ்சல் ஏற்படுத்தும் வகையில் தம்மையே மறந்துசுவாரசியமாகக்கதைத்துச் சிரித்துக் கொண்டு வரும் இத்தகையோர் காவல்துறை போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவினரிடம் வசமாக மாட்டிக் கொள்கின்றனர் இளம் வயதினரே இவ்வாறு பிடிக்கப் படுவோரில் அதிகமாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். மாவட்ட தேர்தலில் குறைபாடு

யாழ். மாவட்ட தேர்தலில் ஒருசில குறைபாடுகள் நிலவியபோதும் நாட்டின் ஏனைய பகுதிகளில் ஜனாதிபதி தேர்தல் சுதந்திரமாக நடைபெற்றதாக சர்வதேச அவதானிகள் நேற்று செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தனர்.

## நினைவு கூருகின்றோம்...

### 14. 11. 1994

1985-ம் ஆண்டு இதே தினத்தில் மன்னார், அடம்பன், ஆட்காட்டிவெளி பகுதியில் உலங்குவானூர்தியின் மூலம் தரையிறங்கிய சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். ரொனி** (யோசப் சௌந்தரநாயகம்-பறப்பாங்கண்டல், உயிலங்குளம் - மன்னார்)

மன்னார் கூராய் ஆற்றில் எதிர்பாராத விதமாக நீரில் மூழ்கியதில் எமைப் பிரிந்த,

**பபா** (மருசலின் ஜெபநேசன் பெரியபண்டிவிரிச்சான் - மன்னார்)

1986-ம் ஆண்டு மட்டு - கள்ளியந்தீவுப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினருடனான சமரின்போது சயனைட் உட்கொண்டு கைக்குண்டு வெடிக்க வைத்து வீரச்சாவெய்திய,

**புண்ணியன்** (இருதயம் மைக்கல் கொலின் -14/1, மத்திய வீதி - மட்டு)

கூனித்தீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் முற்றுகையின் போது சுடப்பட்டு வீரச்சாவெய்திய,

★ **மாதவன் - மாஸ்ரர்** (வை. மாதவராசா - -எல் பி. 03. மூதூர் - திருமலை)

றொட்டை பகுதியில் சிறிலங்கா இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

★ **குமார்** (கார்த்திகேசு ரவிக்குமார் - அம்பாறை)

★ **மனோகரன் -மட்டை** (வேலுப்பிள்ளைவிஜயராசா - அக்கரைப்பற்று)

1987-ம் ஆண்டு யாழ் - கொழும்புத்துறைப் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய,

அரியாலை பிரதேசப் பொறுப்பாளரான,

**அகிலன்** (கந்தையா சசிக்குமார் - சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பு - யாழ்)

மட்டு கந்தாறுமூலைப் பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். சுகந்தன்** (முத்தர் புஸ்பராசா-கோரக்கல்லிமடு - மட்டு

1988-ம் ஆண்டு முல்லைத்தீவில் தேச விரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளர்களான,

**சங்கன்** (- - - -)

**கிரியன்** (- - - -)

1989-ம் ஆண்டு அம்பாறை நகர்ப் பகுதியில் சிறிலங்கா காவற்றுறையினரால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய,

★ **ஜெயராசா** (- - - அக்கரைப்பற்று)

★ **பாபு** (- - - - -அக்கரைப்பற்று)

1990 ம் ஆண்டு சாவகச்சேரிப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட உழவு இயந்திர விபத்தில் எமைப் பிரிந்த,

**கண்ணன் / செல்வம்** (நாராயணசாமி செல்லகிருஷ்ணன் -சுழிபுரம் மத்தி -யாழ்)

இணுவில் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட விபத்தில் எமைப் பிரிந்த,

**அமலன்** (செல்வராசா கேதீஸ்வரன்- கணேஸ் வீதி, ஆனைக்கோட்டை - யாழ்)

மாவிட்டபுரம் சந்தைச்சந்தியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய

**முஸ்தபா** (ரட்ணம் சந்திரசேகர் - புத்தூர் கிழக்கு [-யாழ்)

மட்டுநகரில் எமது முகாமில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப் பிரிந்த,

**மயூரன்** (சினித்தம்பி ஜீவராஜ் - பார்வீதி -மட்டு)

1993 ம் ஆண்டு பூநகரி - நாகதேவன்துறை இராணுவ, கடற்படை கூட்டுத் தளம்மீது 'ஒப்பரேசன் தவளை'' நடவடிக்கையின்போது வீரச்சாவெய்திய,

**மேஜர் தென்றல்மாறன் -கமிலோ** (நவரத்தினம் கருணைவேல் - பண்டத்தரிப்பு - யாழ்)

**கப்டன் சாரங்கன் -யூட்** (செல்வராசா தர்மகுமார் -கொக்குத்தொடுவாய் - முல்லைத்தீவு)

**லெப். றதுலன்** (ஆறுமுகம் பாண்டியராஜ் - பூவரசங்குளம் - வவுனியா)

இதே தினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

★ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்கள்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி - 10704)

## தென்மராட்சிப் பகுதியில் புது விதத்தில் பணம் பறிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சி மற்றும் எழுதுமட்டுவாழ் பகுதிகளில் வீடு வீடாகச் சென்று பொய் கூறிப் பணம்பறிக்கும்கோஷ்டியொன்றின் நடவடிக்கைகள் தொடர்பாக மக்கள் மத்தியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது:

வெளிநாடுகளில் வசிக்கும் உறவினர்களின் விபரங்களுடன் வீடுகளுக்கு வரும் அறிமுகமில்லாத சிலர், அவ் உறவினர்களின் விபரங்களைக் கூறி தம்மை: அறிமுகப்படுத்திக் கொண்டு கச்சிதமாக பணத்தை பறித்துக் கொண்டு மாயமாய் மறையும் சம்பவங்கள் பல இப்பகுதிகளில் இப்போது அடிக்கடி இடம் பெறுகின்றன கடந்த வாரத்திலும் எழுதுமட்டுவாழ் பகுதியிலுள்ள ஒரு வீட்டுக்கு சென்ற இருவர் அங்கிருந்த இளம் பெண்ணிடம் வெளிநாட்டிலுள்ள அவரது கணவருடன் வேலை செய்வதாகவும், விரைவில் திரும்பிப் போகப் போவதாகவும் கூறி ரூபா ஆயிரத்துக்கும் அதிகமான பணத்தைக் கறந்து கொண்டு தலைமறைவாகி விட்டனர், இத்தகைய ஏமாற்று சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெறுவதால் மக்கள் மத்தியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது: (86)

## ப.தெ கூ. அபிவிருத்திசங்கம் ஒருகோடி ரூ.மேல் இழப்பு

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்டத்திலுள்ள பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களுக்கு 1990-ம் ஆண்டிற்கு பின் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் ஒரு கோடி 9 லட்சத்து 72 ஆயிரத்து 410 ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது-

வேலணை, ஊர்காவற்றுறை, பண்டத்தரிப்பு தெல்லிப்பழை பகுதி. பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களே இராணுவ நடவடிக்கைகளினால் பெரிதும் பாதிக்கப்பட்டன-

இச்சங்கங்களின் கட்டடங்கள் தளபாடங்கள் உற்பத்தி நிலைய மூலப் பொருட்கள், உபகரணங்கள் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் ஆகியன சேதமடைந்துள்ளதுடன் நூற்றுக்கணக்கான தொழிலாளர்களும், தொழிலை இழந்தார்கள்-

இந்த இழப்பீடுகள் சம்பந்தமாக பனை தென்னை வள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஊடாக யாழ் அரச அதிபருக்கும் திட்டப் பணிப்பாளருக்கும் வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கும் அறிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது- (24)

## பாடசாலை தளபாடங்கள் இங்கேயே தயாரிக்க முடிவு

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்குத் தேவையான தளபாடங்களை யாழ்ப்பாணத்திலேயே உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன-

கொழும்பிலிருந்து தளபாடங்களை செய்து கொண்டு வருவதற்குப் பெருந்தொகைப் பணம் செலவாவதாகவும் தளபாடங்கள் செய்வதற்குத் தேவையான இரும்புக் கம்பி, பலகைகளை அங்கிருந்து கப்பல் மூலம் தருவித்து யாழ்ப்பாணத்திலேயே தளபாடங்களை செய்வதனால் பெருந்தொகைப்பணம் மிகுதியாகும் என வடக்கு-கிழக்கு மாகாண சபை கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் திரு எஸ். சடாட்சரசண்முகதாஸ் தெரிவித்தார்-

கப்பலில் தளபாடங்களாக ஏற்றி வரும் போது அவை கூடுதல் இடத்தை எடுக்கின்றன. இதற்குப்பதிலாக தளபாடங்களை செய்வதற்குரிய இரும்புக் கம்பிகள், பலகைகளை ஏற்றிவந்தால் இடவசதி குறைந்த கப்பல் கட்டணம் குறைவாக இருக்கும் இதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கினாலேயே இவ்விடயம் சாத்தியப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (24)

## கடல் தொழிலாளருக்கு ஊக்குவிப்புக் கடன்

கடற் தொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனக் கடற்தொழிலாளர்களுக்கு ஊக்குவிப்பு முயற்சிக்கான கடன்களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

அந்த வகையில் வலிகாமம் தென் கடற்தொழிலாளர் சங்க அங்கத்தவர்களில் 20 பயனாளிகளை தெரிவு செய்து ஒரு பயனாளிக்கு 5000/- ரூபா பெறுமதியான மீன்பிடி வலை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும் தென்மராட்சி கடற்தொழிலாளர் ஒன்றிய கிளையில் 35 பயனாளிகளை தெரிவு செய்து 32 பயனாளிகளுக்கு 5,000/- ரூபா பெறுமதியான வலையும் 03 பயனாளிகளுக்கு 10,000/- ரூபா பெறுமதியான வலையும் வழங்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளதென தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செய்திக் குறிப்பொன்றின் மூலம் தெரிவித்துள்ளது:

## தீவுப்பகுதி படகுசேவை எண்ணிக்கை குறைப்பு

நயினாதீவிற்கும் புங்குடுதீவு, நெடுந்தீவு, அனலைதீவு, எழுவைதீவு ஆகிய ஏனைய தீவகப் பகுதிகளுக்கும் இடையே சேவையில் ஈடுபடும் பயணிகள் படகுகளின் எண்ணிக்கை தற்போது வெகுவாக குறைந்து விட்டதாக அறியமுடிகின்றது பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் படகுடன் வேறு இரு தனியாரின் படகுகளுமாக மூன்றேமூன்று படகுகளே தற்போது சேவையில் ஈடுபடுவதாகவும், இவற்றிலும் அடிக்கடி கோளாறுகள் ஏற்பட்டு, சேவை பாதிப்படைவதாகவும் மேலும் தெரிய வருகின்றது சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் மேற்படி சேவை சிறிலங்கா கடற்படையினரின் சோதனைக் கெடுபிடிகளுக்கு மத்தியில் நடைபெறுவதாக நயினையில் இருந்து வந்துள்ளோர் மூலம் அறிய முடிகின்றது- (22)

## 35 வருட துன்ப துயரங்களுக்கு மக்கள் தந்த பரிசு திருமதிசிறிமாவோ

(கொழும்பு)

முப்பத்தைந்து வருட கால அரசியல் வாழ்வில் நான் அனுபவித்த துன்ப துயரங்களுக்கு இது ஒரு பரிசு. இவ்வாறு ஜனாதிபதி தேர்தலில் பொது ஜன ஐக்கிய முன்னணியின் தலைவி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்ககுமாரதுங்கா வெற்றி பெற்றமை தொடர்பாக அவரது தாயாரும், அமைச்சருமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கருத்து வெளியிட்டுள்ளார்-

அவர் மேலும் கூறுகையில் காலஞ் சென்ற எனது கணவரின் அபிலாசைகளை எனது மகள் முன்னெடுத்து செல்வார் என்று நம்புகின்றேன்- எனது உறவினர்களும், நண்பர்களும் அரசியலில் இருந்து ஒதுங்கிக்கொண்டு உடல்நலத்தைக் கவனிக்கும்படி கூறிவந்த அறிவுரைகளுக்கு மத்தியிலும் கட்சிக்கு எனது தலைமைத்துவத்தை வழங்கியே வந்தேன்: எமது மக்கள் என்றோ ஒரு நாள் அதற்கான பரிசை தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்குள் ஆழமாகவே இருந்தது- இன்றைய தேர்தல் முடிவுகள் மக்கள் அந்த சக்தியில் நம்பிக்கை இழக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது- காலஞ்சென்ற எனது கணவரின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதற்கு எனது மகள் முன்வருவார் என்று நம்பி இருந்தேன் எனவும் குறிப்பிட்டார்.

## கோழிகளுக்குதடுப்பூசி

வட்டுக்கோட்டை மிருக வைத்தியசாலையில் தினமும் ஆடு, மாடுகளை சினைப்படுத்தும் சேவையும், ஒவ்வொரு சனிக்கிழமை தோறும் கோழிகளுக்கு கொள்ளை நோய்த் தடுப்பூசியும் போடப்படுகிறது

# தமிழீழ மீட்பு நிதி கடன் மீளல் - 1994

## மார்கழி 1993

### நல்லூர்
(யா/ந)

| | | | |
|---|---|---|---|
| 01. | 349 | 06. | 960 |
| 02. | 420 | 07. | 3408 |
| 03. | 517 | 08. | 3494 |
| 04. | 602 | 09. | 4091 |
| 05. | 921 | 10. | 5515 |

### யாழ்ப்பாணம்
(யா/யா)

| | | | |
|---|---|---|---|
| 01. | 41 | 06. | 1732 |
| 02. | 131 | 07. | 2394 |
| 03. | 236 | 08. | 2624 |
| 04. | 391 | 09. | 3960 |
| 05. | 947 | | |

### கோப்பாய்
(யா/கோ)

| | | | |
|---|---|---|---|
| 01. | 69 | 05. | 1492 |
| 02. | 539 | 06. | 2143 |
| 03. | 679 | 07. | 4839 |
| 04. | 989 | 08. | 6069 |

### உடுவில்
(யா/உ)

| | | | |
|---|---|---|---|
| 01. | 246 | 04. | 2137 |
| 02. | 534 | 05. | 2710 |
| 03. | 2025 | | |

### மானிப்பாய்
(யா/மா)

| | | | |
|---|---|---|---|
| 01. | 204 | 05. | 916 |
| 02. | 569 | 06. | 925 |
| 03. | 748 | 07. | 3183 |
| 04. | 815 | | |

### தெல்லிப்பளை
(யா/தெ)

| | | | |
|---|---|---|---|
| 01. | 31 | 05. | 1663 |
| 02. | 98 | 06. | 1948 |
| 03. | 419 | 07. | 3361 |
| 04. | 430 | 08. | 4134 |

### சங்கானை
(யா/ச)

| | | | |
|---|---|---|---|
| 01. | 381 | 05. | 1864 |
| 02. | 795 | 06. | 2058 |
| 03. | 1184 | 07. | 3260 |
| 04. | 1223 | 08. | 3802 |

### காரைநகர்
(யா/கா)

| | |
|---|---|
| 01. | 166 |
| 02. | 664 |

### வேலணை
(யா/வே)

| | | | |
|---|---|---|---|
| 01. | 94 | 04. | 1318 |
| 02. | 297 | 05. | 2145 |
| 03. | 995 | 06. | 2519 |

### கரவெட்டி
(யா/க)

| | | | |
|---|---|---|---|
| 01. | 32 | 06. | 873 |
| 02. | 173 | 07. | 946 |
| 03. | 348 | 08. | 1364 |
| 04. | 440 | 09. | 3416 |
| 05. | 580 | 10. | 4629 |

### பருத்தித்துறை
(யா/பரு)

| | | | |
|---|---|---|---|
| 01. | 06 | 05. | 882 |
| 02. | 49 | 06. | 1774 |
| 03. | 293 | 07. | 2735 |
| 04. | 540 | 08. | 3395 |

### வடமராட்சிகிழக்கு
(யா/ வ.கி)

| | |
|---|---|
| 01. | 35 |
| 02. | 694 |

### சாவகச்சேரி
(யா / சா)

| | | | |
|---|---|---|---|
| 01. | 183 | 08. | 3560 |
| 02. | 526 | 09. | 3647 |
| 03. | 681 | 10. | 3978 |
| 04. | 720 | 11. | 5638 |
| 05. | 1667 | 12. | 6226 |
| 06. | 1760 | 13. | 6329 |
| 07. | 3124 | | |

### பச்சிலைப்பள்ளி
(கி / ப)

| | |
|---|---|
| 01. | 53 |

### வெளியகல்வு
(யா / வெ)

| | |
|---|---|
| 01. | 52 |
| 02. | 175 |
| 03. | 1094 |

## தை 1994

### நல்லூர்
(யா/ந)

| | | | |
|---|---|---|---|
| 01. | 17 | 06. | 4747 |
| 02. | 329 | 07. | 4944 |
| 03. | 449 | 08. | 5052 |
| 04. | 3263 | 09. | 5056 |
| 05. | 4322 | 10. | 5751 |

### யாழ்ப்பாணம்
[யா/யா]

| | | | |
|---|---|---|---|
| 01. | 05 | 06. | 2803 |
| 02. | 208 | 07. | 2946 |
| 03. | 335 | 08. | 3509 |
| 04. | 1941 | 09. | 4959 |
| 05. | 2567 | | |

### கோப்பாய்
[யா/கோ]

| | | | |
|---|---|---|---|
| 01. | 347 | 05 | 995 |
| 02. | 585 | 06. | 1320 |
| 03 | 799 | 07. | 5279 |
| 04. | 943 | 08. | 5784 |

### உடுவில்
(யா/உ)

| | |
|---|---|
| 01. | 321 |
| 02. | 421 |
| 03. | 766 |
| 04. | 2187 |
| 05. | 2576 |

### மானிப்பாய்
(யா/மா)

| | | | |
|---|---|---|---|
| 01. | 179 | 04. | 2131 |
| 02. | 222 | 05. | 3219 |
| 03. | 228 | 06 | 3330 |

### தெல்லிப்பளை
[யா/தெ]

| | | | |
|---|---|---|---|
| 01. | 480 | 05 | 2910 |
| 02. | 531 | 06. | 3042 |
| 03. | 725 | 07 | 3956 |
| 04 | 2447 | 08. | 4215 |

### சங்கானை
[யா/ச]

| | | | |
|---|---|---|---|
| 01. | 449 | 06. | 3861 |
| 02. | 1409 | 07. | 3893 |
| 03. | 2461 | 08. | 4210 |
| 04. | 3145 | 09. | 4570 |
| 05. | 3181 | | |

### காரைநகர்
(யா/கா)

| | |
|---|---|
| 01. | 614 |
| 02. | 640 |

### வேலணை
(யா/வே)

| | | | |
|---|---|---|---|
| 01. | 69 | 04. | 763 |
| 02. | 91 | 05. | 800 |
| 03. | 182 | 06. | 874 |

### கரவெட்டி
(யா/க)

| | | | |
|---|---|---|---|
| 01. | 190 | 06. | 2476 |
| 02. | 307 | 07. | 3127 |
| 03. | 429 | 08. | 3224 |
| 04. | 715 | 09. | 3339 |
| 05. | 910 | 10. | 4075 |

### பருத்தித்துறை
(யா/பரு)

| | | | |
|---|---|---|---|
| 01. | 122 | 06. | 2108 |
| 02. | 735 | 07. | 2423 |
| 03. | 962 | 08. | 2523 |
| 04. | 1105 | | |
| 05. | 1126 | | |

### வடமராட்சிகிழக்கு
(யா /வ.கி)

| | |
|---|---|
| 01 | 681 |
| 02 | 820 |

### சாவகச்சேரி
(யா/சா)

| | | | |
|---|---|---|---|
| 01. | 48 | 08. | 923 |
| 02. | 124 | 09. | 3565 |
| 03. | 138 | 10. | 4612 |
| 04. | 205 | 11. | 4698 |
| 05. | 413 | 12. | 4775 |
| 06. | 648 | 13. | 5138 |
| 07. | 758 | | |

### பச்சிலைப்பள்ளி
(கி/ப)

| | |
|---|---|
| 01. | 149 |

### வெளியகல்வு
(யா/வெ)

| | |
|---|---|
| 01. | 141 |
| 02. | 216 |
| 03. | 639 |

## மாசி - 1994

### நல்லூர்
(யா/ந)

| | | | |
|---|---|---|---|
| 01. | 239 | 06. | 2744 |
| 02. | 344 | 07. | 4084 |
| 03. | 526 | 08. | 4238 |
| 04. | 634 | 09. | 4324 |
| 05. | 2716 | 10. | 4587 |

### யாழ்ப்பாணம்
(யா/யா)

| | | | |
|---|---|---|---|
| 01. | 10 | 06. | 761 |
| 02. | 67 | 07. | 3194 |
| 03. | 98 | 08. | 3624 |
| 04. | 426 | 09. | 4367 |
| 05. | 504 | | |

### கோப்பாய்
(யா/கோ)

| | | | |
|---|---|---|---|
| 01 | 324 | 05 | 3243 |
| 02 | 734 | 06 | 4276 |
| 03 | 778 | 07 | 6193 |
| 04 | 2330 | 08 | 6347 |

### உடுவில்
(யா/உ)

| | | | |
|---|---|---|---|
| 01. | 53 | 04. | 1365 |
| 02. | 313 | 05. | 2783 |
| 03. | 603 | | |

### மானிப்பாய்
(யா/மா)

| | | | |
|---|---|---|---|
| 01. | 61 | 05. | 3264 |
| 02. | 2242 | 06. | 3684 |
| 03. | 2410 | | |
| 04. | 3075 | | |

### தெல்லிப்பளை
(யா/தெ)

| | | | |
|---|---|---|---|
| 01. | 160 | 05. | 812 |
| 02. | 383 | 06. | 1142 |
| 03. | 726 | 07 | 1748 |
| 04. | 787 | 08. | 4216 |

### சங்கானை
[யா/ச]

| | | | |
|---|---|---|---|
| 01 | 50 | 06. | 959 |
| 02 | 204 | 07. | 1354 |
| 03. | 224 | 08. | 3064 |
| 04. | 869 | 09. | 4048 |
| 05. | 883 | | |

### வேலணை
[யா/வே]

| | | | |
|---|---|---|---|
| 01. | 48 | 04. | 802 |
| 02. | 591 | 05. | 1761 |
| 03. | 622 | 06. | 2865 |

### காரைநகர்
(யா/கா)

| | |
|---|---|
| 01. | 127 |
| 02. | 390 |

### கரவெட்டி
(யா/க)

| | | | |
|---|---|---|---|
| 01. | 212 | 06. | 1814 |
| 02. | 247 | 07. | 2691 |
| 03. | 474 | 08. | 3210 |
| 04. | 712 | 09. | 3237 |
| 05. | 753 | 10. | 3342 |

### பருத்தித்துறை
(யா/பரு)

| | | | |
|---|---|---|---|
| 01. | 46 | 05. | 1407 |
| 02. | 290 | 06. | 1743 |
| 03. | 695 | 07. | 2342 |
| 04. | 847 | 08. | 3918 |

### வடமராட்சிகிழக்கு
(யா/வ.கி)

| | |
|---|---|
| 01. | 533 |
| 02. | 877 |

### சாவகச்சேரி
(யா/சா)

| | | | |
|---|---|---|---|
| 01. | 361 | 08. | 1903 |
| 02. | 386 | 09. | 1985 |
| 03. | 678 | 10. | 3230 |
| 04. | 798 | 11. | 3356 |
| 05. | 954 | 12. | 5257 |
| 06. | 1052 | 13. | 5686 |
| 07. | 1247 | | |

### பச்சிலைப்பள்ளி
(கி/ப)

| | |
|---|---|
| 01 | 136 |

### வெளியகல்வு
(யா/வெ)

| | |
|---|---|
| 01. | 233 |
| 02. | 384 |
| 03. | 1313 |

## பங்குனி 1994

### நல்லூர்
[யா/ந]

| | | | |
|---|---|---|---|
| 01. | 318 | 06. | 3718 |
| 02. | 787 | 07. | 3764 |
| 03. | 1074 | 08. | 4685 |
| 04. | 2071 | 09. | 4901 |
| 05. | 3210 | 10. | 5075 |

### யர்ழ்ப்பாணம்
[யா/யா]

| | | | |
|---|---|---|---|
| 01. | 132 | 06 | 595 |
| 02. | 332 | 07. | 2329 |
| 03. | 342 | 08. | 3161 |
| 04. | 404 | 09. | 4292 |
| 05. | 542 | | |

### கோப்பாய்
[யா/கோ]

| | | | |
|---|---|---|---|
| 01. | 37 | 05. | 1133 |
| 02. | 839 | 06. | 1318 |
| 03. | 948 | 07. | 2265 |
| 04. | 1069 | 08. | 5351 |

### உடுவில்
(யா/உ)

| | | | |
|---|---|---|---|
| 01. | 623 | 04. | 916 |
| 02. | 652 | 05. | 1832 |
| 03. | 787 | | |

### மானிப்பாய்
(யா/மா)

| | | | |
|---|---|---|---|
| 01. | 23 | 04. | 1319 |
| 02. | 833 | 05. | 3833 |
| 03. | 882 | 06. | 3837 |

### தெல்லிப்பளை
(யா/தெ)

| | | | |
|---|---|---|---|
| 01. | 474 | 05. | 3135 |
| 02. | 937 | 06. | 3175 |
| 03. | 2343 | 07. | 3719 |
| 04. | 2672 | 08. | 3745 |

### சங்கானை
[யா/ச]

| | | | |
|---|---|---|---|
| 01. | 08 | 06. | 513 |
| 02. | 290 | 07. | 2812 |
| 03. | 311 | 08. | 3123 |
| 04. | 422 | 09. | 3213 |
| 05. | 433 | | |

### காரைநகர்
[யா/கா]

| | |
|---|---|
| 01 | 272 |
| 02 | 292 |

### வேலணை
(யா/வே)

| | | | |
|---|---|---|---|
| 01 | 584 | 04. | 1513 |
| 02. | 916 | 05. | 2311 |
| 03. | 1378 | | |

### கரவெட்டி
[யா/க]

| | | | |
|---|---|---|---|
| 01. | 145 | 06. | 624 |
| 02. | 172 | 07. | 2013 |
| 03. | 305 | 08. | 2791 |
| 04. | 538 | 09. | 3118 |
| 05. | 553 | 10. | 4305 |

### பருத்கித்துறை
[யா/பரு]

| | | | |
|---|---|---|---|
| 01. | 515 | 05. | 1022 |
| 02. | 534 | 06. | 1325 |
| 03. | 721 | 07. | 2513 |
| 04. | 759 | 08. | 3409 |

### வடமராட்சிகிழக்கு
[யா/வ.கி]

| | |
|---|---|
| 01. | 353 |
| 02. | 572 |

### சாவகச்சேரி
[யா/சா]

| | | | |
|---|---|---|---|
| 01. | 214 | 08. | 2387 |
| 02. | 225 | 09. | 2690 |
| 03. | 233 | 10. | 3160 |
| 04. | 497 | 11. | 3296 |
| 05. | 818 | 12. | 6286 |
| 06. | 926 | 13. | 6582 |
| 07. | 1831 | | |

### பச்சிலைப்பள்ளி
[கி/ப]

| | |
|---|---|
| 01. | 96 |
| 02. | 482 |

### வெளியகல்வு
(யா/வெ)

| | |
|---|---|
| 01. | 929 |
| 02. | 1130 |
| 03. | 1550 |

## சித்திரை 1994

### நல்லூர்
(யா/ந)

| | | | |
|---|---|---|---|
| 01. | 48 | 06. | 1928 |
| 02. | 72 | 07. | 2390 |
| 03. | 196 | 08. | 3582 |
| 04. | 230 | 09. | 3934 |
| 05. | 472 | 10. | 4551 |

### யாழ்ப்பாணம்
(யா/யா)

| | | | |
|---|---|---|---|
| 01. | 146 | 06. | 3386 |
| 02. | 532 | 07. | 3597 |
| 03. | 992 | 08. | 4032 |
| 04. | 2639 | 09. | 4033 |
| 05. | 3006 | | |

### கோப்பாய்
[யா/கோ]

| | | | |
|---|---|---|---|
| 01. | 142 | 05. | 615 |
| 02. | 258 | 06. | 1227 |
| 03 | 505 | 07. | 1253 |
| 04. | 581 | 08. | 2451 |

### உடுவில்
[யா/உ]

| | | | |
|---|---|---|---|
| 01. | 119 | 04. | 1102 |
| 02. | 141 | 05. | 1188 |
| 03. | 439 | | |

### மானிப்பாய்
[யா/மா]

| | | | |
|---|---|---|---|
| 01. | 193 | 04. | 3053 |
| 02. | 398 | 05. | 3120 |
| 03. | 2137 | 06. | 3729 |

### தெல்லிப்பளை
[யா/தெ]

| | | | |
|---|---|---|---|
| 01. | 113 | 05. | 1842 |
| 02. | 597 | 06. | 2813 |
| 03. | 730 | 07. | 3322 |
| 04. | 892 | 08. | 3378 |

### சங்கானை
[யா/ச]

| | | | |
|---|---|---|---|
| 01. | 174 | 06. | 1135 |
| 02. | 253 | 07. | 1195 |
| 03. | 462 | 08. | 1924 |
| 04. | 480 | 09. | 1942 |
| 05. | 938 | | |

### கர்ரைநகர்
[யா/கா]

| | |
|---|---|
| 01. | 352 |
| 02. | 419 |

### வேலணை
[யா/வே]

| | | | |
|---|---|---|---|
| 01. | 109 | 04. | 1386 |
| 02. | 284 | 05. | 1540 |
| 03. | 291 | 06. | 1869 |

### கரவெட்டி
(யா/க)

| | | | |
|---|---|---|---|
| 01. | 31 | 06. | 2748 |
| 02. | 63 | 07. | 2871 |
| 03. | 123 | 08. | 3544 |
| 04. | 341 | 09. | 3774 |
| 05. | 2244 | 10. | 4216 |

### பருத்தித்துறை
[யா/பரு]

| | | | |
|---|---|---|---|
| 01. | 121 | 05. | 2068 |
| 02. | 221 | 06. | 2120 |
| 03. | 554 | 07. | 3331 |
| 04. | 616 | 08. | 3508 |

### வடமராட்சி கிழக்கு
[யா/வ. கி]

| | |
|---|---|
| 01. | 113 |
| 02. | 153 |

### சாவகச்சேரி
[யா/சா]

| | | | |
|---|---|---|---|
| 01. | 13 | 08. | 2296 |
| 02. | 192 | 09. | 2452 |
| 03. | 284 | 10. | 3926 |
| 04. | 612 | 11. | 4984 |
| 05. | 826 | 12. | 5448 |
| 06. | 1235 | 13. | 5826 |
| 07. | 1263 | | |

### பச்சிலைப்பள்ளி
(கி/ப]

| | |
|---|---|
| 01. | 23 |

### வெளியகல்வு
(யா/வெ)

| | |
|---|---|
| 01. | 699 |
| 02. | 842 |
| 03. | 871 |

## வைகாசி 1994

### நல்லூர்
[யா/ந]

| | | | |
|---|---|---|---|
| 01. | 157 | 06. | 2180 |
| 02. | 641 | 07. | 4082 |
| 03. | 647 | 08. | 4110 |
| 04. | 923 | 09. | 4323 |
| 05. | 1564 | 10. | 4648 |

### யாழ்ப்பாணம்
[யா/யா]

| | | | |
|---|---|---|---|
| 01. | 234 | 06. | 3028 |
| 02. | 672 | 07. | 3143 |
| 03. | 1164 | 08. | 3472 |
| 04. | 2333 | 09. | 3736 |
| 05. | 2941 | | |

### கோப்பாய்
[யா/கோ]

| | | | |
|---|---|---|---|
| 01. | 182 | 05. | 1231 |
| 02. | 193 | 06. | 2313 |
| 03. | 253 | 07. | 2823 |
| 04. | 901 | 08. | 5422 |

### உருவில்
[யா/உ]

| | |
|---|---|
| 01. | 417 |
| 02. | 600 |
| 03. | 666 |
| 04. | 731 |
| 05. | 892 |

### மானிப்பாய்
(யா/மா]

| | | | |
|---|---|---|---|
| 01. | 94 | 04. | 439 |
| 02. | 138 | 05. | 3641 |
| 03. | 427 | 06. | 3664 |

### தெல்லிப்பளை
[யா/தெ]

| | | | |
|---|---|---|---|
| 01. | 07 | 05. | 617 |
| 02. | 62 | 06. | 739 |
| 03. | 311 | 07. | 1580 |
| 04. | 414 | 08. | 2856 |

### சங்கானை
[யா/ச]

| | | | |
|---|---|---|---|
| 01. | 427 | 07. | 3720 |
| 02. | 710 | 08. | 4188 |
| 03. | 914 | 09. | 4313 |
| 04. | 960 | | |
| 05. | 1023 | | |
| 06. | 3362 | | |

### காரைநகர்
(யா/கா)

| | |
|---|---|
| 01. | 33 |
| 02. | 74 |

### வேலணை
[யா/வே]

| | |
|---|---|
| 01. | 283 |
| 02. | 423 |
| 03. | 517 |
| 04. | 574 |
| 05 | 1374 |
| 06. | 2601 |

### கரவெட்டி
[யா/க]

| | | | |
|---|---|---|---|
| 01. | 30 | 06 | 3157 |
| 02. | 221 | 07. | 3217 |
| 03. | 930 | 08. | 3507 |
| 04. | 2369 | 09. | 4033 |
| 05. | 3142 | 10. | 4816 |

### பருத்தித்துறை
(யா/பரு)

| | | | |
|---|---|---|---|
| 01. | 63 | 05. | 569 |
| 02. | 129 | 06. | 789 |
| 03. | 174 | 07. | 3048 |
| 04. | 378 | 08. | 3480 |

### வடமராட்சிகிழக்கு
[யா/வ. கி]

| | |
|---|---|
| 01. | 457 |
| 02. | 617 |

### சாவகச்சேரி
[யா/சா]

| | | | |
|---|---|---|---|
| 01. | 12 | 08. | 1043 |
| 02. | 27 | 09. | 1131 |
| 03. | 114 | 10. | 2493 |
| 04. | 367 | 11. | 4360 |
| 05. | 659 | 12. | 4370 |
| 06. | 817 | 13. | 5244 |
| 07. | 1004 | | |

### பச்சிலைப்பள்ளி
[கி/ப]

| | |
|---|---|
| 01. | 518 |

### வெளியகல்வு
[யா/வெ]

| | |
|---|---|
| 01. | 174 |
| 02. | 246 |
| 03. | 499 |

## ஆனி 1994

### நல்லூர்
(யா/ந)

| | | | |
|---|---|---|---|
| 01. | 100 | 06. | 678 |
| 02. | 364 | 07. | 1431 |
| 03. | 373 | 08. | 4325 |
| 04. | 407 | 09. | 5162 |
| 05. | 468 | 10. | 5644 |

### யாழ்ப்பாணம்
(யா/யா)

| | | | |
|---|---|---|---|
| 01. | 154 | 06 | 890 |
| 02. | 455 | 07. | 1403 |
| 03. | 486 | 08. | 2519 |
| 04. | 784 | 09. | 2579 |
| 05. | 808 | 10. | 4827 |

### கோப்பாய்
[யா/கோ]

| | | | |
|---|---|---|---|
| 01. | 483 | 05. | 3651 |
| 02. | 1124 | 06. | 5499 |
| 03. | 1684 | 07. | 6164 |
| 04. | 3531 | 08. | 6202 |

### உருவில்
[யா/உ]

| | |
|---|---|
| 01. | 77 |
| 02. | 612 |
| 03. | 713 |
| 04. | 2398 |

### மானிப்பாய்
(யா/மா)

| | | | |
|---|---|---|---|
| 01. | 09 | 05. | 1118 |
| 02. | 149 | 06. | 1850 |
| 03. | 162 | 07. | 2415 |
| 04. | 559 | | |

### தெல்லிப்பளை
[யா/தெ]

| | | | |
|---|---|---|---|
| 01. | 32 | 05. | 242 |
| 02. | 87 | 06. | 684 |
| 03. | 90 | 07. | 742 |
| 04. | 193 | 08. | 3652 |

### சங்கானை
[யா/ச]

| | | | |
|---|---|---|---|
| 01. | 417 | 06. | 2348 |
| 02. | 525 | 07. | 2437 |
| 03. | 980 | 08. | 3973 |
| 04. | 1801 | 09. | 4039 |
| 05. | 2299 | | |

### கர்ரைநகர்
(யா/கா)

| | |
|---|---|
| 01. | 189 |
| 02. | 204 |

### வேலணை
(யா/வே)

| | | | |
|---|---|---|---|
| 01 | 52 | 04. | 576 |
| 02. | 76 | 05. | 764 |
| 03. | 537 | | |

### கரவெட்டி
(யா/க)

| | | | |
|---|---|---|---|
| 01. | 05 | 06. | 699 |
| 02. | 174 | 07. | 1946 |
| 03. | 346 | 08. | 2300 |
| 04. | 402 | 09. | 2419 |
| 05. | 535 | 10. | 4557 |

### பருத்தித்துறை
(யா/பரு)

| | | | |
|---|---|---|---|
| 01. | 86 | 05. | 2200 |
| 02. | 793 | 06. | 2305 |
| 03. | 828 | 07. | 2343 |
| 04. | 1682 | 08. | 2363 |

### வடமராட்சி கிழக்கு
[யா/வ.கி]

| | |
|---|---|
| 01. | 41 |
| 02. | 76 |

### சாவகச்சேரி
[யா/சா]

| | | | |
|---|---|---|---|
| 01. | 317 | 08. | 3263 |
| 02. | 445 | 09. | 4309 |
| 03. | 464 | 10. | 4039 |
| 04. | 842 | 11. | 4380 |
| 05. | 959 | 12. | 4505 |
| 06. | 1420 | 13. | 5440 |
| 07. | 2840 | | |

### பச்சிலைப்பள்ளி
[கி/ப]

| | |
|---|---|
| 01. | 681 |

### வெளியகல்வு
[யா/வெ]

| | |
|---|---|
| 01. | 292 |
| 02. | 310 |
| 03. | 321 |

## ஆடி - 1994

### நல்லூர்
[யா/ந]

| | | | |
|---|---|---|---|
| 01. | 255 | 06. | 3445 |
| 02. | 297 | 07. | 4086 |
| 03. | 425 | 08. | 5319 |
| 04. | 756 | 09. | 5437 |
| 05. | 897 | 10. | 5791 |

### யாழ்ப்பாணம்
(யா/யா)

| | | | |
|---|---|---|---|
| 01. | 43 | 06. | 1290 |
| 02. | 130 | 07. | 1311 |
| 03. | 630 | 08. | 2642 |
| 04. | 645 | 09. | 3026 |
| 05. | 656 | 10. | 4813 |

### கோப்பாய்
[யா/கோ]

| | | | |
|---|---|---|---|
| 01. | 07 | 05. | 1745 |
| 02. | 30 | 06. | 2240 |
| 03. | 327 | 07. | 4139 |
| 04. | 475 | 08. | 6109 |

### உடுவில்
(யா/உ)

| | |
|---|---|
| 01. | 16 |
| 02. | 31 |
| 03. | 266 |
| 04. | 822 |

### மானிப்பாய்
(யா/மா)

| | | | |
|---|---|---|---|
| 01. | 75 | 05. | 2412 |
| 02. | 674 | 06. | 3207 |
| 03. | 775 | 07. | 3836 |
| 04. | 832 | | |

### தெல்லிப்பளை
(யா/தெ)

| | | | |
|---|---|---|---|
| 01. | 178 | 05. | 771 |
| 02. | 278 | 06. | 836 |
| 03. | 384 | 07. | 843 |
| 04. | 453 | 08. | 2976 |

### சங்கானை
(யா/ச)

| | | | |
|---|---|---|---|
| 01. | 35. | 06. | 974 |
| 02. | 67. | 07. | 2027 |
| 03. | 165 | 08. | 3301 |
| 04. | 324 | 09. | 4037 |
| 05. | 511 | | |

(தொடரும்)

# இந்திராகாந்தியின் கொலையை கனடா தடுத்து இருக்க முடியும்

## கனேடிய உளவாளி ஒருவர் கருத்து

இந்திராகாந்தியின்கொலையைத் தடுத்திருக்கக் கூடிய அரிய சந்தர்ப்பம் ஒன்றை கனடா தவறவிட்டதாகவும், ஒட்டாவாவிலுள்ள சீக்கியர்களின் இரகசிய இடம் ஒன்றில் தான் அறிந்த தகவலை கனேடிய பாதுகாப்பு உளவுப் பிரிவு உதாசீனம் செய்ததாகவும், கனடாவின் உளவாளியான டோரதி புரக்டர் - கல்காரி ஹெரால்ட் எனும் பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், 1984 அக்டோபரில இந்திரா காந்தி கொலை செய்யப்படுவதற்கு முன், அதே ஆண்டு ஜூன் மாதம் ஒட்டாவா நகரில் சீக்கியர்கள் வாழும் இரகசிய இடமொன்றில் இத்தகவலைப் பெற்றதாகவும், கிறிஸ்மஸுக்கு முன்னர் இச்சதி அரங்கேறத் திட்டமிடப்பட்டிருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொலிசாரிடமும், கனேடிய பாதுகாப்பு உளவுப் பிரிவிடமும் தாம் இவ்விடயத்தைத் தெரிவித்திருந்தும் அவர்கள் எதுவும் செய்யவில்லை எனக் கூறும் டோரதி புரக்டர், தற்போது உளவுப் பணியிலிருந்து ஓய்வு பெற்று கனடாவின் மறைவிடம் ஒன்றில் வசித்து வருகின்றார்.

# தமிழ் அகதிகளை அனுமதிக்க ஐரோப்பியர் பின்னடிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையருக்கு வெளிநாடுகளில் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில வேலையின்மை, பொருளாதார கஷ்டம் அதிகரித்து வருகிறது.

இந்தநிலை கிழக்கு ஐரோப்பியநாடுகளில் இருந்து மேற்கு ஐரோப்பாவிற்கு வரும் அகதிகளின் தொகை அதிகரித்து வருவதால் ஏற்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள இலங்கை அகதிகள் கிழக்கு ஐரோப்பியரின் வருகையை அடுத்து அகதிகளிற்குள் இரண்டாம் தர அகதிகளாகக் கணிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இலங்கை அகதிகளைவிட கிழக்கு ஐரோப்பிய அகதிகளிற்கு வேலைவாய்ப்பு, தங்கும் இட அனுமதி மற்றும் வசதிகளில் முன்னுரிமை வழங்கப்படுவதாகவும் இதனால் அங்கு வேலையின்மை பொருளாதார கஷ்டம் அதிகரித்து வருவதாகவும் சொல்லப்படுகிறது.

ஐரோப்பா தங்களிற்குள் பொருளாதார ஒற்றுமையை நோக்கி நகர்த்தப்பட்டு வருகிறது. தற்பொழுது ஐரோப்பிய பொருளாதார சமூகத்தில் 12 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இதில் இன்னும் 6 நாடுகள் சேர்ந்து கொள்ள உள்ளன. இந்நிலை அதிகரித்து வரும்போது இலங்கை அகதிகளின் உரிமைகள் மறுக்கப்படும் தன்மை அதிகரிக்கின்றது என மேலும் தெரியவருகின்றது. (இ, ச)

# இராணுவ வீரர் ஒருவரால் யுத்த டாங்கி திருடப்பட்டது

இஸ்ரேலின் தென்பகுதியிலுள்ள இராணுவத் தளத்திலிருந்து யுத்தடாங்கியொன்றை இராணுவ வீரர் ஒருவர் திருடிச் சென்றுள்ளார். இவ் யுத்த டாங்கியை குறிப்பிட்ட இராணுவ வீரர் கடத்திக் கொண்டு சென்றபோது பயணிகள் பஸ் ஒன்றுடன் மோதியதால் ஐவர் காயங்களுக்கு உள்ளானதாக இஸ்ரேலிய வானொலி தெரிவித்தது.

மேற்படி யுத்தடாங்கியை இராணுவ வீரர் திருடிச் சென்றமைக்கான காரணம் என்னவென்று தெரியவில்லை என இஸ்ரேலிய பொலிஸ் படைத் தலைவரான அஸ்ஸால் ஹெவெட்ஸ் கூறியுள்ளார்.

## ஒக்ஸ்போர்ட்பல்கலைக்கழகத்திலும் மாணவிகளுக்கு துன்புறுத்தல்

(லண்டன்)

உலகின் பிரபலம் மிக்க ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவிகளில் ஐந்தில் நான்கு பேர் ஆண் மாணவர்களின் சேட்டைகளுக்கும், தகாத கிண்டல்களுக்கும் ஆளாவதாக ஆய்வொன்று தெரிவித்துள்ளது.

அதேசமயம் 97 சதவீதமான கறுப்பர்கள் தாங்கள் ஏச்சுக்கு உள்ளாவதாகவும் தாக்கப்படுவதாகவும் கூறியுள்ளனர்

600 ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக மாணவர்களிடையே இந்த ஆய்வை லண்டன் டைம்ஸ் பத்திரிகை நடத்தியது

# கொடிகாமத்தில் மோதல் நான்கு பேர் படுகாயம்

கொடிகாமம் தவசிகுளம் பகுதியில் இடம்பெற்ற கோஷ்டி மோதலில் படுகாயமடைந்த நால்வர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அ. வேலாயுதம் (43 வயது) வே. தயாபரன் (20 வயது) மா. மாணிக்கராசா (32 வயது) மா. சிவகரன் (22 வயது) ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர். இவர்கள் அனைவரும் சாவகச்சேரி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இக் கோஷ்டி மோதல் தொடர்பாக காவல் துறையினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (86)

# பரு. வைத்தியசாலையில் பல் வைத்தியர் இல்லை

(வடமராட்சி)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில பதில் பல் வைத்தியர் நியமிக்கப்படாததால் பற்சிகிச்சைப் பிரிவு ஒரு வாரத்திற்கு மேலாக மூடப்பட்டுக்கிடக்கிறது.

இம் மாதம் 3-ம்திகதி லீவில் சென்ற பல் வைத்தியருக்கு பதிலாக பதில் நியமனம் செய்யப்படாததால் வடமராட்சியில் உள்ள பல் நோயாளிகள் தினமும் வைத்திய சாலைக்குச் சென்று ஏமாற்றத்துடன் திரும்பி வருகின்றனர்.

வடபிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளருக்கு பல் வைத்தியரின் தேவை பற்றியும் நோயாளிகளின் கஷ்ட நிலைபற்றியும் எடுத்துத் தெரிவித்த போதிலும் பணிப்பாளர் இவ் விடயத்தில் அசிரத்தையாக நடந்து கொள்வதால் நோயாளிகளுக்கு பல் வேதனையைவிட தினமும் மழைகால நேரத்தில் வந்து அலைந்து திரிவது மேலும் அவர்களுக்கு பெரும் வேதனையாக உள்ளது. இவ் வேதனைகளை தாங்க முடியாத நோயாளிகள் விசனம் அடைகின்றனர். (யோ)

## முறைசாராக்கல்வி

தட்டச்சு இயந்திரம் திருத்துதல், பயிற்சி, அடிப்படை இலத்திரனியல் பயிற்சி, நீர்ப்பம்பி திருத்துதல் பயிற்சி, கைப்பணிப் பயிற்சி, சித்திரம் தொழில் முறைப் பயிற்சி, மற்றும் ஆங்கில தட்டெழுத்து சுருக்கெழுத்து பயிற்சிஎன்பன யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களத்தின் முறைசாராக் கல்விப் பிரிவினரால் ஆரம்பிக்கப் படவுள்ளன. இவற்றிற்கான பயிற்சி நெறிகள் நாளை முதல் ஆரம்பமாகவுள்ளன.


## குடிசார் தொழில்நுட்பவியல் பயிலுநரை தெரிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவம் கோரல்

பொறியியல் துறையில் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் எமது நிறுவனத்தில் தொழில்நுட்பவியல் பயிலுநரை தெரிவு செய்து தகுதி பெற்ற பொறியியலாளர்களின்மேற்பார்வையில் குடிசார் தொழில்நுட்பவியல் துறையில் பாடநெறி ஒன்றினை பயிற்றுவிப்பதுடன், செய்முறைப் பயிற்சியும் வழங்கப்படும். மேற்படி பயிற்சி நெறியில் இணைய விரும்பும், கீழ்வரும் தகைமையுடைய இருபாலாரும் 25-11-1994 இற்கு முன்பாக விண்ணப்பிக்கலாம். பயிற்சிக்காலத்தில் விசேடபடி வழங்கப்படும்

தகைமை

க. பொ. த. (உ/த) பரீட்சையில் கணிதப்பிரிவில் மூன்றுபாடம் சித்திபெற்றிருத்தல் விரும்பத்தக்கது.

க. பொ. த. (சா/த) பரீட்சையில் கணிதம், விஞ்ஞானத்தில் விசேட சித்தி எய்தியவர்களும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு முகவரி

பொது முகாமையாளர்,
கரம் நிறுவனம்,
விமலகுமார் வீதி,
ஆனைக்கோட்டை. (10088)



## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
27. 06. 1966

ஈழ மண்ணில்
14. 11. 1990

**வீரவேங்கை கண்ணன்/செல்வம்**
(நாராயணசாமி செல்வக்கிருஷ்ணன்)
தீதி:- 16. 11. 94

அரக்கரை அழித்த கண்ணனின் நாமத்தை
அழைக்கும் பெயராய் கொண்டிட்ட வீரனே
இரக்கமற்றோரை இடி போல எதிர்த்து
இழைத்த செயலை நினைந்து
சிறக்க நின்ற நினைவாண்டு நான்கிலும்
மறக்க முடியாமல் மனதிலே வாழ்கிறாய்:

உன் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பெற்றோர், சகோதரர்கள்,
அண்ணா, அண்ணி, பிள்ளைகள்
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

சுழிபுரம் மத்தி,
சுழிபுரம். (10102)



நான்கு வருட இடைவெளிக்குப் பின்
## நாகம்ஸ் பாட்டா ஸ்தாபனத்தார்

மீண்டும் பாட்டா கம்பனியாரின் உத்தரவாதம் பெற்ற விற்பனையாளராக

**திங்கட்கிழமைமுதல் 14 . 11 . 94**

விற்பனையை ஆரம்பிக்கின்றார்கள்.

பாட்டா கம்பனியாரால் குறிக்கப்பட்ட விலையிலேயே விற்பனை. நாகம்ஸ் பாட்டாவில் வாங்கப்படும் பாட்டா பாதணிகளுக்கு பாட்டா கம்பனியினரால் மூன்றுமாத உத்தரவாதம் வழங்கப்படுகிறது.

# நாகம்ஸ் பாட்டா

சுன்னாகம்

**நாகம்ஸ் பாட்டா யாழ். கிளை,**

34, சந்தோசம் (கஸ்தூரியார்) வீதி,
யாழ்ப்பாணம். (10090)



## NAHAMS BATA

CHUNNAKAM

AUTHORIZED DEALER OF BATA SHOE COMPANY OF CEYLON LTD.
COMMENCE BUSINESS ON MONDAY 14th OF NOV. 1994.
AFTER FOUR YEARS OF INTERVAL.

ALL THE BATA FOOT WEARS WILL BE SOLD AT THE MARKED PRICE.
THREE MONTHS GUARANTEE WILL BE GIVEN BY THE BATA SHOE COMPANY OF CEYLON LTD. TO ALL THE BATA ITEMS SOLD AT NAHAMS BATA.

(10091)



## தவளை நடவடிக்கையின் போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட

வீரச்சாவு
12-11-93

**லெப்.ஜீவன்**
சத்துருக்கன்
அமிர்தலிங்கம்
(தம்பாறை)


**வீரவேங்கை பதி**
சிவலிங்கம்
பிறேம்குமார்
(மட்டக்களப்பு)

வாழ்க்கையின் இலட்சியம் இதுவெனக் கொண்டு
சோதனை எத்தனை வந்தாலும்
தாங்கிடும் இதயம் இதுவென - தம்
சத்தியத்தை இலட்சியமாகக் கொண்டு
ஈழத் தமிழரின் துயர் துடைக்க விரைந்த
இவ்விரு வேங்கைகளுடன்
வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களையும்
இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

(10101) - நண்பர்கள்



## உங்கள் நினைவுடன் 10 ஆண்டுகள்



**அமரர் திரு. வி. சிங்காரவேலு**
(தலைமைச்செயலக உதவி அரச அதிபர், முல்லைத்தீவு)

பிறந்தமை 14. 03 1940 இறந்தமை 14 11. 1984


அன்று
எமக்கு நீங்கள் தந்தவை
அன்பான அரவணைப்புகள்,
அறிவுரைகள், வழிகாட்டல்கள்,
இனிய நினைவுகள்....
அவை இன்றும்
இனிய நினைவுகளாய்
எம் இதயத்தில்
கண்ணீர்த்துளிகளுடன்...

466, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவில்,
குடும்பத்தினர்
(10097)



## மர்ம மறைவு நினைவு தினம்



செல்வன்
**சின்னத்துரை தயாபரன்**
(பேராதனை பல்கலைக்கழக பொறியியற் பீட மாணவன்)

மர்ம மறைவு:- 14-11-92

புகழ்பூத்த பேராதனைப் பொறியியற் பீடம் போற்ற
கற்ற கல்வி முற்றுப் பெறும் காலம் வரும் முன்பே
சகவாழ்வில் உனைப் பெற்ற தாய் தந்தைதனை
உடன் பிறந்தோரை சுற்றத்தாரை சஞ்சலிக்கவிட்டு
நீ சென்றதென்ன.

மகாவலி ஆற்றிலே சங்கமம் ஆகின்றேன்
என்றெழுதி வைத்தெம்மை ஏங்க விட்டு சென்றதென்ன
ஆவலினால் தேடுகிறோம், தேடுகின்றோம்
தேடிக் கொண்டே ஒன்றும் தெரியாமல் திகைக்கின்றோம்

தாய் துயர் தெரியாத தனயனே அல்லன் நீ
தயாபரன் என்பதாலே தவிப்பினை அறிவாய்தானே!
மாயமேவாழ்வென்றாலும் மறைவதே இயல்பென்றாலும்
மனமெலாம் நிறைந்த உன்னை மறக்கவே முடியாதையா

ஆ. சின்னத்துரையும்
குடும்பத்தினரும்.

'நீலகிரி'
கரணவாய் மத்தி,
கரவெட்டி. (10015)

**சிந்தனைக்கு.**

பாதி உண்மை பெரும்பாலும் முழுப் பொய்க்கு சமமாகி விடுகிறது

றிச்சாட் வேட்லி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 14-11-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05

# தப்பான வாதங்கள் தீர்வுக்கு உதவாது

"சமாதானப் பேச்சுவார்த்தைகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளன. மக்களால் அங்கீகரிக்கப்பட்ட சமாதான நடவடிக்கைகளைக் கைவிடுவதற்கு எந்தவித காரணமும் இல்லை" இவ்வாறு ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற பின்னர் முதல்முறை பத்திரிகையாளர்களைச் சந்தித்து பேசிய புதிய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகாவின் இவ் அறிவிப்பானது தேர்தல் வெற்றியின் அடிப்படையில் சரியானதே. அதாவது சமாதான முயற்சிகளுக்கு ஆதரவாக வாக்களித்தோரின் 62.28 வீதமானோர் உள்ளனர் என்பதே இவ் அறிவிப்பின் அடிப்படையாகும். ஆனால் இது இலங்கையின் மொத்த வாக்காளர் தொகையில் பெரும்பான்மைக்கு குறைவானது என்பது சுட்டிக்காட்டத்தக்கதாகும்; அதாவது, மொத்த வாக்காளர்களில் சுமார் 43.21 வீதம் மட்டுமே புதிய ஜனாதிபதிக்கு ஆதரவாக வாக்களித்துள்ளது என்பதே உண்மை நிலையாகும்.

ஆனால், இது எவ்வாறு இருப்பினும் மிக உயர்ந்தவு வாக்கு வீதத்தில் சந்திரிகா குமாரதுங்கா வெற்றி பெற்றதும், அது இனப்பிரச்சினைக்குச் சமாதான ரீதியில் தீர்ப்பதற்குக் கிடைக்கப்பெற்ற அங்கீகாரம் என்பதையும் கேள்விக்குரியதாக்குவதில் அர்த்தம் எதுவும் இருப்பதாக இல்லை.

அத்தோடு இம்முறை தேர்தலில் சிறுபான்மை இனங்களைச் சேர்ந்தவர்களின் கணிசமான வாக்குகளும் சந்திரிகா குமாரதுங்காவிற்குக் கிடைக்கப்பெற்றுள்ளது இந்தவகையில் குறிப்பிடத்தக்க அளவிலான பெரும்பான்மையினரும் கணிசமான சிறுபான்மையினரும் இனப்பிரச்சினைக்குச் சமாதான ரீதியில் தீர்வொன்றை சந்திரிகா குமாரதுங்கா கொண்டு வருவார் என்ற எதிர்பார்க்கையில் வாக்களித்துள்ளனர் எனலாம். இதனை சந்திரிகா குமாரதுங்காவிற்கு வழங்கப்பட்ட ஒரு சந்தர்ப்பமாகவும் கருதமுடியும்.

ஆனால், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா சமாதானத்திற்கு கிடைத்த அங்கீகாரத்திற்காக சுட்டிக்காட்டிய உதாரணமும் சற்று விசனத்துக்கு உரியதாகும் "வடக்கில் 90 வீத மக்களும், கிழக்கில் வாழும் 87 சதவீத மக்களும் தமது சமாதான நடவடிக்கைகளை அங்கீகரித்துள்ளார்கள்" என்பது அவர் உண்மைக்குப் புறம்பாகப் பேசியுள்ளார் என்றே கருத ஏதுவாகும்.

தமிழ் மக்கள் எப்பொழுதுமே சமாதானத்தை விரும்புகின்றவர்கள். அவர்கள் சமாதானமாக சாத்வீக ரீதியில் கேட்டுக் கேட்டுக் கிடைக்காத நிலையிலேயே தமது அரசியல் உரிமைக்காக ஆயுதம் ஏந்தியவர்கள். அதன்பின்னர் கூட சமாதானத்தை வலியுறுத்தியே வந்தவர்கள்.

இந்நிலையில் ஐ.தே. கட்சி இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வே ஒரேவழி எனக் கூறிக்கொண்டிருக்கையில், தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்த்து வைத்து இனப்பிரச்சினைக்கு சமாதான ரீதியிலான தீர்வைக் கொண்டு வருவேன் என சந்திரிகா குமாரதுங்கா உறுதி வழங்கிய வேளையில் அவருக்கு ஒரு சந்தர்ப்பத்தை தேர்தல் இடம்பெற்ற இடங்களில் தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் வழங்க முன்வந்திருக்கலாம், இது பொ. ஐ. முன்னணி வேட்பாளருக்கு அளிக்கப்பட்ட வாக்கு என்பதை விட இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்விற்கும் சமாதானத்திற்குமாக அளிக்கப்பட்ட வாக்கு என்றே கொள்ளலாம்.

இந்த நிலையில் இனப்பிரச்சினைக்கு தமிழ் மக்கள் ஏற்கக்கூடிய ஒரு கௌரவமான தீர்வை முன்வைக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு ஆகும். ஆனால் இதற்கு மாறாக தமிழ்மக்கள் சந்திரிகாவிற்கு அளித்த வாக்குகள் அவரின் தலைமைத்துவத்தை ஏற்றுக் கொண்டதாகவோ அன்றி அவர் முன்வைக்கும் பிரச்சினைக்கான தீர்வை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்/ஏற்றுக்கொள்வார்கள் என்பதே அர்த்தமில்லை.

இவ்வாறாக இவ்விடயத்தை இங்கு சுட்டிக்காட்ட வேண்டிய அவசியத்தை ஜனாதிபதி சந்திரிகா ஏற்படுத்தியது தான் வேதனைக்குரியது. வடபகுதியில் உள்ள மக்களில் 90 வீதமான மக்கள் தமது கொள்கைக்கு அங்கீகாரம் அளித்துள்ளனர் என்பது உண்மைக்குப் புறம்பானது வடபகுதி வாக்காளர்களில் 10 வீதமானோர்கூடக் கலந்து கொள்ளாத தேர்தலில் 90 வீதமான வாக்காளர் ஆதரித்தார்கள் எனப்பேசுவது நாகரிகமான பேச்சல்ல பருத்தித்துறை தொகுதியில் நடந்துள்ளது போன்று ஒரு தொகுதியில் எட்டுப்பேர் தமது வாக்குகளை சந்திரிகா குமாரதுங்காவிற்கு அளித்தால் அது 100 வீத ஆதரவு ஆகிவிடுமா? இதனை சந்திரிகா குமாரதுங்கா ஏற்றுக் கொண்டு நியாயப்படுத்துவது எவ்வாறு பொருத்தப்பாடானது. இது அவர் பேசும் ஜனநாயக உரிமைகளுக்கு முரண்பாடானதாக இல்லையா?

அதாவது வடக்கில் பெரும்பரப்பில், பெரும்பான்மை மக்கள் கலந்து கொள்ளாது நடைபெற்ற தேர்தலில் தேர்தல் வெற்றிக்கு உரிமை கோருவதில் நியாயம் எதுவுமில்லை. அவ்வாறானால் போதுத் தேர்தலில் 10000 க்குக் குறைவான வாக்குகளுடன் ஒன்பது எம்.பி பதவிகளைப் பெற்றுக்கொண்ட ஈ.பி.டி.பி யின் வெற்றிக்கும் இதுக்கும் வித்தியாசம் இல்லாது போய்விடும்.

ஆனால் இந்தவகையில் உண்மைக்குப் புறம்பாகப் பேசுவதென்பது ஜனாதிபதி சந்திரிகாவிற்கும் நல்லதல்ல சமாதான முயற்சிகளுக்கும் நல்லதல்ல. ஜனாதிபதி சந்திரிகா கூறுவது போன்று உண்மையிலேயே இனப்பிரச்சினைக்கு சமாதான தீர்வொன்றைக் காண அவர் விரும்பினால் நியாய பூர்வமாகப் பேசுவதுடன் உண்மைக்குப் புறம்பாகப் பேசவோ அன்றி தொலைத்தொடர்பு மக்கள் தொடர்பு சாதனங்களையோ பயன்படுத்துவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். அது சமாதானம் கணிசமான அளவில் முன்னேற உதவும்.

# வாக்குபெட்டியுடன் சென்ற பஸ்சாரதி மீது தாக்குதல்

## இராணுவத்தினர் மீது நடவடிக்கை

(கொழும்பு)

வாக்குப் பெட்டிகளை ஏற்றிச் சென்ற பஸ் வண்டியின் சாரதியைத் தாக்கியமைக்காக மாங்கேணி இராணுவ முகாமை சேர்ந்த படையினர் இருவர் இராணுவப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாக்குப்பெட்டிகளை வாக்குச் சாவடிகளுக்கு ஏற்றிச் செல்லும் போது பயணிகள் சிலரையும் ஏற்றிச்செல்லும்படி இராணுவத்தினர் பணித்ததாகவும், வாக்குப் பெட்டிகளுடன் பயணிகளை ஏற்றிச் செல்வது சட்ட விரோதமானது எனச் சாரதி தெரிவித்ததைத் தொடர்ந்து அவர் தாக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இச் சம்பவம் பற்றி மட்டக்களப்பு அரசாங்க அதிபரிடம் தேர்தல் அதிகாரிகள் புகார் தெரிவித்ததைத் தொடர்ந்து இவ் இராணுவத்தினர் கைது செய்யப் பட்டுள்ளனர். விசாரணைக்கும் உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பதவி ஏற்ற பின்னர்

# ஜனாதிபதி திருமதி சந்திரிகா தமிழில் நிகழ்த்திய உரை

(கொழும்பு)

பதவிப் பிரமாணம் செய்த பின்னர் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா இறுதி இரு நிமிடங்களும் தமிழ் மொழியில் உரையாற்றினார்.

சமயப் பெரியார்களே! தாய்மார்களே! சகோதர சகோதரிகளே என் மீது நம்பிக்கை வைத்து சாதி, சமய, இன வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு மிகப் பெரும்பான்மை வாக்குகளால் என்னை ஜனாதிபதியாக தெரிவு செய்தமைக்காக உங்கள் அனைவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகள். சுபீட்சம் பெற; சமாதானம் நிலவ ஒன்றுபட்டு உழைப்போம். உங்கள் அனைவருக்கும் மும்மணிகளின் ஆசி கிடைப்பதாக.

# சிங்கள மாணவர்களுக்கு தமிழ்ப் பாடம் போதனை

## மேல் மாகாணசபை ஏற்பாடு

(கொழும்பு)

மேல் மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் கல்வியை முடித்துக் கொண்டு வெளியேறும் சிங்கள மாணவர்களுக்கு அடுத்த ஆண்டு முதல் விசேட தமிழ்ப் பாட வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளது. இதன் மூலம் இன ஒற்றுமையை கட்டி எழுப்ப முடியும். இவ்வாறு மேல் மாகாண சபையின் முதலமைச்சர் மொறிஸ் ராஜபக்ஷா தெரிவித்தார்.

கொட்டாஞ்சேனை தமிழ் மகாவித்தியாலயத்தில் முற்போக்கு ஆசிரியர் முன்னணியால் நடத்தப்பட்ட இடம்பெயர்ந்த ஆசிரியர்களின் பிரச்சினைகள் சம்பந்தமான கூட்டமொன்றில் பேசும் போது மேல்மாகாண முதல்வர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு முதலமைச்சர் தொடர்ந்து பேசுகையில், மேல் மாகாணத்தில் 1492 பாடசாலைகள் இருக்கின்றன. இதில் 82 தமிழ்ப்பாடசாலைகளும், 52 முஸ்லிம் பாடசாலைகளும் அடங்கும். தமிழ் முஸ்லிம் பாடசாலைகளை பொறுத்த வரையில் 500க்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகிறது.

# ஊனமுற்ற படையினருக்கு அரச பஸ்களில் தனியிடம்

(கொழும்பு)

இலங்கையின் அரச பேருந்துகளில் அங்கவீனமுற்ற படையினருக்கென தனியான ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பெண்கள், மதகுருமாருக்கென தனியான ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருப்பதைப் போன்று தற்போது போரில் ஊனமுற்ற படையினர் அமருவதற்கென தனியான ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஒதுக்குவதற்கான உத்தரவை போக்குவரத்து அமைச்சர் சிறிமானி அத்துலத் முதலி பிறப்பித்திருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ் நூல் நிலைய புனரமைப்பு

# நன்கொடை திரட்ட அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் எரிக்கப்பட்ட பொதுசன நூல் நிலையத்தை புனரமைப்பு செய்வதற்கு தேவையான நிதியை திரட்டுவதற்கு சிறிலங்கா அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

கடந்த கால ஆட்சியாளரால் திட்டமிட்டு எரிக்கப்பட்ட யாழ் பொதுசன நூல் நிலையத்தை மீளமைக்கும் முயற்சியில் புதிய அரசு தீவிரம் காட்டி வருவது தெரிந்ததே

இதனை மீளமைக்க தேவையான நிதியை நன்கொடையாகப் பெறுவதற்கு கலாசார சமய விவகார அமைச்சர் லக்ஸ்மன் ஜெயக்கொடி முன்வைத்த ஆலோசனையை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது

# பிபிலை நகரப் பகுதியில் 8 கடைகள் தீயினால் சேதம்

(கொழும்பு)

பிபிலை நகரப் பகுதியில் கடந்த ஒன்பதாம் திகதியன்று இரவு பத்து முப்பது மணியளவில் எட்டு கடைகள் தீக்கிரையாகி இருப்பதாக பிபிலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நிரஞ்சன் அம்பாயோ கூறியுள்ளார்.

இலங்கை வங்கியின் பிபிலை கிளை அலுவலகத்திற்கு முன்பாக இருந்த எட்டு கடைகள் இத்தீயினால் நாசமாகி இருப்பதாகவும், தேர்தல் தினத்தன்று இரவு இடம் பெற்றதால் அரசியல் நோக்கம் எதுவும் இதன் பின்னணியில் இருக்கக் கூடும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இக் கடைகளில் ஒன்று நகைக் கடை எனவும் பாதுகாப்பு படையினரும் பொலிசாரும் எடுத்த முயற்சியின் பயனாக இரண்டு கடைகள் காப்பாற்றப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வத்தளையில் ஒரு கும்பல் தமிழரிடம் பணம் பறிப்பு

(கொழும்பு)

தமிழர்களை மிரட்டிப் பணம் பறிக்கும் கோஷ்டி ஒன்று வத்தளைப் பகுதியில் நடமாடி வருவதாக அப்பகுதி மக்கள் புகார் கூறியுள்ளனர்.

கடந்த செவ்வாயன்றும் வத்தளை ஹெரவல பிட்டிய பகுதியில் காலை 11மணியளவில் ஆட்டோ ஒன்றில் வந்த மூவர் வயதான தமிழர் ஒருவரை வழி மறித்து கொள்ளையிடமுயன்ற சம்பவம் ஒன்றும் இடம்பெற்றுள்ளது.

# சந்திரிகாவின் வெற்றிக்கு புலிகளுடன் வெளிப்படையாக பேசியதே காரணம்

## லண்டன் இண்டிபெண்டன்ற் தெரிவிப்பு

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை ஒன்றை வெளிப்படையாக நடத்தியதாலேயே மக்கள் இவர்மீது நம்பிக்கைகொண்டு வாக்களித்துள்ளதாக பிரிட்டனில் இருந்து வெளியாகும் "தஇண்டிபெண்டன்ற்" நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

யுத்தத்தினால் களைத்தும் சலித்தும் போய் வேதனை அடைந்த சிங்கள மக்கள் சந்திரிகாவின் இவ் வெற்றிக்கு காரணமாக உள்ளனர்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதை ஒரு பயந்த போக்கு என காட்ட முற்பட்ட பல இராணுவ உயர் அதிகாரிகளுக்கு உடனடியாக யுத்த நிறுத்தம் ஏற்பட வேண்டும் என்ற நிலையை இவ்வெற்றி சுட்டிக் காட்டுகிறது என மேலும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கௌரவமான தீர்வைக் காண சந்திரிகாவுக்கு மக்கள் ஆணை

## வெரித்தாஸ் வானொலி கருத்து

(மணிலா)

ஜனாதிபதி சந்திரிகாவும் சரிசனைய விமர்சகர்களும் சரி அனைவரும் கூறுவது போல் அவருக்கு கிடைத்த 47 லட்சம் வாக்குகளும் சந்திரிகாவின் அமைதியின் தேடலுக்கு கிடைத்த வாக்குகள் இனப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வாருங்கள் உங்கள் முயற்சியை ஆதரிக்கின்றோம் என பெரும்பான்மை சிங்கள மக்கள் இறுதியாக கண்திறந்து அளித்த வாக்குகள் இவ்வாறு புதிய சிறிலங்கா பெண் ஜனாதிபதி குறித்து வெரித்தாஸ் வானொலி குறிப்பிட்டது.

அதில் மேலும், எவ்விலை கொடுத்தாகிலும் தீர்வு என்றல்ல கௌரவமான தீர்வு என்று திருமதி சந்திரிகா கூறுவது அவரது மிதவாத அணுகுமுறையை காட்டுகின்றது.

சந்திரிகா முன்னெடுக்கும் சமாதான நடவடிக்கைகள் அல்லது அவர் தரப்போகும் புதிய தீர்வுகள் பெரும்பான்மையினரை திருப்திபடுத்தாது விட்டாலும் பரவாயில்லை. ஏனெனில் சந்திரிகாவின் தந்தை பண்டாரநாயக்கா ஏற்படுத்திய மொழி வெறி விதை அப்போது பெரும்பான்மையினரால் வரவேற்பு புகழப்பட்டது. ஆனால் அவ் விதை ஏற்படுத்திய கறையினால் அவர் தேசத்தை சீர் குலைத்தவர் என இன்றைய தலைமுறையினரால் கருதப்படுகின்றார்.

அதுபோலவே சந்திரிகா தமிழர் பிரச்சினையை தீர்க்க எடுக்கும் நடவடிக்கையை இன்றைய தலைமுறை ஏற்காது விட்டாலும் கூட பரவாயில்லை எதிர்கால தலைமுறை சந்திரிகாவை வரலாற்று நாயகியாக ஏற்கும்.

# தாண்டிக்குளம் சோதனை முகாமில் பெண்கள் மீதான கெடுபிடி அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வவுனியா தாண்டிக்குளம் இராணுவ சோதனை முகாமில் இளம் தமிழ்ப் பெண்கள் மீதான சோதனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

எதிர்க்கட்சித் தலைவரும் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளருமான காமினி திசாநாயக்கா குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து பெண் ஒருவரே இத் தாக்குதல் சம்பவத்தில்சம்பந்தப்பட்டுள்ளார் என இராணுவம் கருதுவதனால் தமிழ்ப் பெண்கள் மீது தீவிரமான சோதனைகள் நடாத்தப்படுகின்றன.

கொழும்பிலிருந்தும் மற்றும் தென்பகுதிகளிலிருந்தும் வரும் பயணிகளில் இளம் பெண் பயணிகள் தனிமைப்படுத்தி நிற்க வைக்கப்படுகின்றனர். பெண் இராணுவத்தினராலும் பொலிசாராலும் அவர்கள் நீண்ட நேரம் விசாரிக்கப்படுவதுடன் தீவிரசோதனைக்கும் உட்படுத்தப்படுகின்றனர்.

இதே மாதிரி வடபகுதியிலிருந்து வவுனியா ஊடாக கொழும்பு செல்லும் இளம் பெண்களும் கடுமையாக சோதனைக்குள்ளாகின்றனர். சில பெண்கள் நீண்ட நேரம் தடுத்து வைக்கப்படுகின்றனர்.

மேற்படி பெண்களுடன் வரும் பிற உறவினர்கள் காத்திருக்க வேண்டியும் கஷ்டங்களுக்குள்ளாவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம், ஆண் பயணிகள் மீதான கெடுபிடிகள் சற்றுக் குறைந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆயினும் எடுத்துவரப்படும் பொருள்கள் யாவும் கிண்டிக் கிளறி நீண்ட நேரம் சோதனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (தி)

# மாறும் அரசியலமைப்பில் சிறிமாவோ ஜனாதிபதியாவார்

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிக்கப்பட்டு ஜனாதிபதிப் பதவி ஒரு சம்பிரதாய பூர்வமான பதவியாக மாற்றப்படும்போது அதிகார கைமாற்றம் சிக்கல்களின்றி ஈடேறுவதற்கு வசதியாகவே ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா தமது தாயாரை பிரதமர் பதவிக்கு நியமிக்க முடிவு செய்துள்ளதாக ராய்ட்டர் செய்தி நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

அது மேலும் கூறுகையில் பிரதமர் பதவிக்கு வேறு எவரேனும்நியமிக்கப்பட்டால் ஜனாதிபதி ஆட்சிமுறை அகற்றப்படும் போது பிரதமருக்கு கூடுதலான அதிகாரங்கள் கிடைக்கும் அப்போது பிரதமராக இருப்பவர் பதவி விலக மறுத்தால் பெரும் சட்டப் பிரச்சனைகள் ஏற்படலாம். நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிக்கப்பட்ட பின்னர் திருமதி சிறிமாவோவை சம்பிரதாய பூர்வ ஜனாதிபதியாக்குவதே திருமதி சந்திரிகாவின் திட்டம் என்றும் தெரிய வருகிறது.

புத்தளம் மாவட்ட பா. உறுப்பினர்

# பெர்னாண்டோ மரணம் ரகசிய பொலிஸ் விசாரணை

(கொழும்பு)

புத்தளம் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரான ஜோசப் பெர்னாண்டோ வாகன விபத்தில் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக புத்தளம் மாவட்ட மக்கள் மத்தியில் பலத்த சந்தேகம் தோன்றியுள்ளது. இதனையடுத்து இரகசியப் பொலிசார் இச்சம்பவம் தொடர்பாக பூரண விசாரணை நடத்துவதற்காக அழைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை இரவு புத்தளம் மாவட்ட அரசாங்க செயலகத்தில் வாக்குகள் எண்ணப்படுவதைப்பார்வையிட்ட பின்னர் கொழும்பு நோக்கி சென்று கொண்டிருக்கையில் ஏற்பட்ட வாகன விபத்து ஒன்றில் பாராளுமன்ற உறுப்பினரான ஜோசப் பெர்னாண்டோ உயிரிழந்தது தெரிந்ததே.

வென்னப்புவ சந்தியில் இடம்பெற்ற வாகன விபத்தின் பின்னணியில் ஏதும் சதித் திட்டங்கள் இருக்கலாமெனப் புகார் கூறப்பட்டதையடுத்து பொலிஸ்மா அதிபர் இரகசியப் பொலிசாரை விசாரணை நடத்தும் படி பணிப்புரை விடுத்துள்ளார்.

## பொருட்கள் இறக்குவதில் தாமதம்

சீரற்ற காலை நிலையால் பருத்தித்துறை இறங்குதுறையில் கப்பலில் இருந்து மா இறக்கும் வேலைகள் மந்த நிலையையடைந்துள்ளது கடந்த மூன்று நாட்களாக தொடர்ந்து பெய்துவரும் மழையையடுத்து மந்தநிலை காணப்படுகிறது.

மற்றும் மண்ணெண்ணெய் பரல்களை ஏற்றிய 'மாகோ' கப்பல் தற்போது திருகோணமலையில் தரித்து நிற்பதாகவும், 'குமண' கப்பல் கொழும்பு துறைமுகத்தில் பொருள்களை ஏற்றுவதற்காக தரித்து நிற்பதாகவும் அறியப்படுகிறது காங்கேசன்துறையிலும் ஹபரண கப்பல் தரித்து நிற்கிறது குமண கப்பலிலும் பொருள்கள் ஏற்றும் வேலைகள் சீரற்ற காலநிலையினால் தாமதமடைந்து வருகிறது. (யோ)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994. 11. 14
திங்கள் இரவு
08.01 - தளிர்கள் - சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
08.20 - தாயகப் பாடல்கள்
08.30 - செய்திகள்
08.40 - தரிசனம் - தமிழீழத்தின் மூத்த வயலின் இசைக்கலைஞர் திருசிவானந்த குருக்கள் சர்வேஸ்வர சர்மா அவர்களுடனான செவ்வி
09.00 - மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

1994. 11. 15
செவ்வாய் காலை
07.02 - மாவீரவணக்கம்
07.15 - இன்றையநாளை
07.30 - செய்திகள்
07.35 - பத்திரிகைச் செய்திகள்
07.40 - தாயகப் பாடல்கள்
08.00 - மணிக்கு காலை நிகழ்ச்சிகள்யாவும் நிறைவுபெறும்.

# காணாமல்போன ஏழுமீனவர் குறித்து தகவல் எதுவும் கிடைக்கவில்லை

(குருநகர்)

கடலுக்கு சென்ற ஏழு மீனவர்களையும் காணாது குருநகர் கிராமமே பெரும் சோகத்தில் மூழ்கியுள்ளது.

சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பால் கடந்த 9-ம் திகதி குருநகர் பகுதியில் இருந்து கடலில் தொழிலுக்குச் சென்ற ஏழு மீனவர்களும் அவர்கள்சென்ற மூன்று படகுகளும் இதுவரை கரை திரும்பவில்லையாம்.

காணாமல் போனவர்களை சக மீனவர்கள் சில நாட்களாக தொடர்ந்து தேடுதல் நடத்தியும் அம் முயற்சி தோல்வியில் முடிவடைந்தது.

இருந்த போதிலும் காணாமல் போனவர்களது சடலங்களோ அல்லது வளங்களோ இதுவரை கரை ஒதுங்காதது குறித்து பலத்த சந்தேகங்கள் எழுந்துள்ளன.

காமினி கொலை தொடர்பாக

## பெண்ணின் உடற் கூறு லண்டனில் ஆராய்வு

[கொழும்பு]

காமினி திசாநாயக்காவின் கொலைக்கு காரணமானவர் எனக் கருதப்படும் பெண் ஒருவரின் உடல் கூறுகள் தற்போது பிரிட்டனில் உள்ள சட்ட மருத்துவ நிபுணர்களால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

குண்டு வெடிக்க முன் இப்பெண் சயனைட் உட்கொண்டாரா என அறிவதற்கு முயற்சிகள் நடைபெறுகிறது. இப்பெண்ணின் தலை, கைத் துண்டுகள், ஒரு கால் என்பன ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

மாத்தளை மாவட்டத்தில்

## வாக்குச் சாவடியில் நின்ற பொலிஸின் கை துண்டிப்பு

ஜனாதிபதித் தேர்தல் நடந்து முடிந்ததைத் தொடர்ந்து மாத்தளை மாவட்டத்தில் இரண்டு அசம்பாவிதங்கள் இடம் பெற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது

இவ் இரண்டு அசம்பாவிதங்களும் தம்புள்ள தேர்தல் தொகுதியிலேயே இடம் பெற்றுள்ளது இதில் ஒரு சம்பவத்தில் தந்தையும், மகனும் கத்திக் குத்துக்காயங்களுக்கு இலக்காகி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் மற்றுமொரு இடத்தில் வாக்குச் சாவடியில் நின்ற பொலிசார் ஒருவரின் கை துண்டிக்கப்பட்டுள்ளது

## ரோகண விஜேவீர பெயரில் புலமைப் பரிசில் திட்டம்

(கொழும்பு)

ஜே. வி. பியின் முன்னாள் தலைவர் ரோகண விஜேவீர பெயரிலான புலமைப்பரிசில் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது பராக்கிரமவின் ஐந்தாம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி ஆரம்பிக்கப்படுவதாக இத்திட்டத்தின் பணிப்பாளர் ஆரியபுலே கொட தெரிவித்துள்ளார்-

அரசியல் படுகொலைக்குள்ளான குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கல்வி கற்பதற்கான நிதியுதவி மற்றும் புலமைப் பரிசில்களை இததிட்டம் மூலம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுளளது- நுகே கொட மக்கள் வங்கியில் ரோகண விஜேவீர நினைவு நிதியம் ஒன்றும்இதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ளது-

1989 இல் ரோகண விஜேவீர அரச படைகளால் கைது செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டமை தெரிந்ததே-

**இரவு 9.00 மணிவரை**

கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள் இந்நேர நீடிப்பானது கடைகளில் வேலை செய்யும் ஊழியர்களது நல உரிமைகளைப் பாதிக்காதவாறு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். ஊழியர்கள் தாமாக விரும்பினால் மட்டுமே, மேலதிக நேரம் (நாளொன்றுக்கு எட்டு மணித்தியாலங்களுக்கு மேல்) வேலை செய்யலாம். தினவரவு ஏட்டில் தெளிவாக கடமைக்கு வந்து செல்லும் நேரம் குறிக்கப்படுதல் வேண்டும், மேலதிக வேலை நேரப் பட்டியல் தயாரிக்கப்பட்டு, மேலதிக நேர வேலைக்கான ஊதியம் அந்தந்த மாத சம்பளக் கொடுப்பனவுகளுடன் சம்பளப்பட்டியலில் காட்டப்பட்டு வழங்கப்படல் வேண்டும்.

பொதுமக்களுக்கான அன்றாட பாவனைப் பொருட்கள் தடையின்றி விரைவாக விநியோகிக்கப்படுவதற்கும் வர்த்தகர்களது ஊழியர்களது நலன்கருதியும் மேற்கூறிய நடைமுறைகள் கைக்கொள்ளப்பட வேண்டும்.

இந்நடைமுறை நாளையில் இருந்து நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக்குழு நடத்தும் உதைபந்து சுற்றுப் போட்டியில் இன்று 2 மணிக்குஉரும்பராய் இந்து எதிர் மானிப்பாய் இந்து. மத்திய கல்லூரி மைதானத்தில் சேரமஸ்கந்தா எதிர் கனகரத்தினம் ம. ம. வி., வரணி ம. வி எதிர்வட்டு. இந்துவும் மோதும்.

யாழ் பல்கலைக் கழக மைதானத்தில் புங்குடுதீவு ம.வி எதிர் யாழ். இந்து, ஸ்கந்தா எதிர் விக்னேஸ்வரா, சாவகச்சேரி இந்து எதிர் யாழ். மத்திய கல்லூரியும் மோதும்.

## விசேட கூட்டம்

முதனிலை இளநிலை தேர்வின் மதிப்பீட்டு நிலையங்களுக்கு முதன்மைத் தேர்வாளர்களாகக் கடமைபுரிவதற்கு கோட்டப்பிரதிக் கல்விப்பணிப்பாளரால் தெரிவு செய்யப்பட்டோருக்கான கூட்டம் 17 - 11 - 94 வியாழக்கிழமை பி.ப 2. 00 மணிக்கு நல்லூர் ஸ்தான பாடசாலையில் நடைபெறவிருப்பதால் இக்கூட்டத்திற்கு கோட்டப்பிரதிக்கல்விப்பணிப்பாளர்களையும் மதிப்பீட்டுக்கிளை உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளும்படி தேர்வு ஆணையாளர் கேட்டுள்ளார்

முதனிலை தேர்வின் மதிப்பீடு ஒவ்வொரு கோட்டங்களிலும் 18- 11 -94 தொடக்கம் 19 - 11 - 94 வரையும் இளநிலைத் தேர்வின் மதிப்பீடு 22 - 11 - 94 தொடக்கம் 24 - 11 - 94 வரையும் நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது

# கிழக்குதீமோர்ராணுவத்தைஎதிர்த்து ஆயிரம் மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

## மோதலில் இரு மாணவர் பலி

இந்தோனேசியாவினால் 1975-ம் ஆண்டு தன்னோடு சேர்த்துக்கொண்ட திமோர் தீவின் தலைநகர் தில்லி நகரில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் நேற்று இந்தோனேசிய இராணுவத்தினருடன் மோதத் தலைப்பட்டனர். இராணுவத்தினர் நடத்திய பதில் தாக்குதலில் இரு மாணவர்கள் உயிரிழந்திருக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தோனேசியாவின் இராணுவத்தை எதிர்த்துவரும் கிழக்கு திமோர் மக்கள் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கும் அதிகமானோர் கொல்லப்பட்ட நினைவு தினம் நேற்று ஆகும்.

ஆசிய பசுபிக் பொருளாதார மகாநாட்டை நடத்துவதன் மூலம் உலகில் நற்பெயரை எடுக்க முயலும் இந்தோனேசியாவுக்கு நேற்று நடந்த தில்லி நகர் சம்பவம் பலத்த அவமானத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் திமோரை சேர்ந்த 29 இளைஞர்கள் தமது போராட்டத் தலைவரை இந்தோனேசிய அரசு விடுவிக்க அமெரிக்கா நிர்ப்பந்திக்கவேண்டும் எனக் கோரி இந்தோனேஷியாவில் உள்ள அமெரிக்க தூதரகத்தினுள் புகுந்து ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர்

போர்த்துகீச காலனித்துவ நாடாக இருந்த திமோர்தீவு 1970களில் இந்தோனேஷியாவால் தன்னோடு இணைக்கப்பட்டது இதை எதிர்த்து அத்தீவு வாசிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இதனிடையே அமெரிக்க தூதரகத்தினுள் புகுந்த 29 திமோர் வாசிகளும் தாம் அங்கு விரைவில் வரவுள்ள அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரனை சந்தித்துப் பேச அனுமதிக்குமாறு அமெரிக்க தூதரக அதிகாரிகளைக் கேட்டுள்ளனர்

## நவாஸ் ஷெரீப்பின் தந்தையார் கைது

பாகிஸ்தான் முன்னாள் பிரதமரும் எதிர்க்கட்சித்தலைவருமான நவாஸ் ஷெரீப்பின் தந்தையார் திருமதி பெனாசிர் பூட்டோவின் அரசினால் கைது செய்யப்பட்டார்.

மோசடி குற்றஞ்சாட்டப்பட்டு அவர் வீட்டிலிருந்து கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டார் தனது தந்தையின் கைது அரசியல் பழிவாங்கலே என நவாஸ் ஷெரீப் குற்றஞ்சாட்டியுள்ளார்

# பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் இன்று கொழும்பு வருகிறார்

(கொழும்பு)

பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் டொஸ்லி போல்ரி இன்று சிறிலங்காவிற்கான விஜயமொன்றை மேற்கொள்ள இருப்பதாக பி. பி. சி தெரிவித்துள்ளது.

வடக்கு-கிழக்கு மக்களுக்கு எவ்வித உதவிகளைவழங்குதல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி முதலீடு தொடர்பாக விரிவான பேச்சுவார்த்தைகளை சிறிலங்கா அரசுடன் நடத்த இருப்பதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

வெளிவிவகார அமைச்சராக பதவியேற்ற பின்னர் இவர் சிறிலங்கா வருவது இதுவே முதல்முறை என சுட்டிக்காட்டப்பட்டது.

செய்தியாளர் மாநாட்டின்போது

# புகைப்படக் கருவிகள் துருவித்துருவி ஆராய்வு

(கொழும்பு)

நேற்று முன்தினம் நடைபெற்ற ஜனாதிபதி சந்திரிகாவின் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட செய்தியாளர்களது புகைப்படக் கருவிகள் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவு விசேட அதிரடிப்படையினால் துருவித்துருவி ஆராயப்பட்டன. இதன் பின்னர் இவற்றின் மீது விசேட அனுமதி அட்டை ஒட்டப்பட்டபினபே செய்தியாளர் மாநாட்டினுள் அனுமதிக்கப்பட்டன;

வெளிநாட்டு பத்திரிகையாளர்களின் நீளம் கூடிய அகன்ற கமராக்களும் அதிரடிப்படையால் பரிசோதிக்கப்பட்டதுடன் அதற்காக அச் செய்தியாளர்களிடம் படையினர் மன்னிப்பும் கேட்டுக்கொண்டனர்.

## நிதி ஒதுக்கீடு

(நல்லூர்)

நந்தாவில் குளத்தை திருத்தப்படுத்தப்பட்ட வரவு செலவுதற்காக ரூபா 2 இலட்சத்து 25 ஆயிரம் பன்முகவுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

நல்லூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் 21-11-94 திங்கட்கிழமைமு.ப 10-30 மணிக்கு நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெற உள்ளதாகவும் இவர் தெரிவித்துள்ளார். (17)

## ராணுவ நடவடிக்கை சேதம் விபரம் திரட்ட நடவடிக்கை

(தொல்புரம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கையால் ஏற்பட்ட சேதங்கள் பற்றிய விபரம் சேகரிக்கும் பணிகள் நடைபெறுகின்றன.

வலிமேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலிருந்தும் 1990 ஆம் வருட யூன் மாதத்தின் பின்னர் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பான விபரங்கள் சேகரிக்கப்பட்டும், இந்த விபரத்தில் முழுமையான சேதம் பகுதியான சேதம் என வகைப்படுத்தப்பட்டும் சகல விபரங்களும் திரட்டப்படுகின்றன.

## பண்டித வகுப்புகள்

பிரவேச பண்டித, பாலா பண்டித, பண்டித வகுப்புக்கள் டிசம்பர் மாத முதல் வாரத்தில் யாழ். மாவட்டத்தில் ஐந்து இடங்களில் தொடங்குகின்றன-

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் உதவியுடன் ஆரிய திராவிடபாஷா அபிவிருத்திச் சங்கம் நடத்தும் இவ் வகுப்புக்கள் முறையே டிசம்பர் முதலாம் நாள் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியிலும், 2-ம் நாள் அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்திலும், 3-ம் நாள் நல்லூர் ஸ்தான சி. சி. த. க பாடசாலையிலும், 4-ம் நாள் மானிப்பாய் மெமோறியல் கல்லூரியிலும் - இணுவில் மத்திய கல்லூரியிலும் தொடங்குவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது-

இவ் வகுப்புகளில் கலந்து கொள்ள விரும்புவோர் மேற்படி பள்ளிகளின் அதிபர்களிடமோ அல்லது அவ்வப் பகுதி கோட்டக் கல்வி அலுவலகத்திலோ தமது பெயர் விவரங்களை இம்மாத முடிவிற்குள் பதிவுசெய்துகொள்ளவேண்டுமென அறிவிக்கப்படுகின்றது-

## ஹமாஸ் இயக்கத்தவர் நூறு பேர் கைதாகினர்

(டெல் அவிவ்)

காஸா பகுதியின் நிர்வாகத்தை பொறுப்பேற்றிருக்கும் பாலத்தீனிய விடுதலை இயக்கம் இஸ்லாமிய தீவிரவாத இயக்கமான ஹமாஸ் இயக்கத் தொடர்புடையவர்களில் நூற்றுக்கும் அதிகமானோரைக் கைது செய்துள்ளது:

கடந்த வெள்ளியன்று தற்கொலைப் படைத்தாக்குதலில் இஸ்ரேலியப் படையினர் மூவர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து பாலத்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் ஹமாஸ் இயக்கத்தவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து இக் கைதுகள் இடம் பெற்றுள்ளன இதேவேளை இந் நடவடிக்கையின் போது துப்பாக்கிப் பிரயோகமும் இருதரப்பில் இருந்தும் மேற்கொள்ளப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இஸ்ரேலுடன் பாலத்தீனிய விடுதலை இயக்கத்தலைவர் செய்து கொண்ட உடன்படிக்கையை தொடர்ந்து காஸா மற்றும் ஜெரிக்கோ பகுதிகளின் நிர்வாகம் பாலத்தீனியரிடம் கையளிக்கப்பட்டிருப்பதும், அதனை எதிர்த்து ஹமாஸ் இயக்கம் கிளர்ச்சி நடவடிக்கையில்ஈடுபடுகிறது

**பாப்பரசருக்கு**

பொல்லூன்றி நடப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன:

வத்திக்கான் வைத்தியர்கள் பாப்பரசரிற்கு புற்று நோய் சம்பந்தமான வைத்திய பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

[இ]

**அதிகாரப்**

யுத்த நிறுத்தத்தினால் ஓர் அரசியல் தீர்வைக் கொண்டு வர முடியாது எனவே நாம் யுத்த நிறுத்தத்தை மட்டும் கருத்தில் கொள்ள முடியாது யுத்த நிறுத்தத்தினால் பல பிரச்சினைகள் உருவாகலாம் அந்நேரத்தில் அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதில் காலம் செலவாகுமே தவிர அரசியல் தீர்வு தொடர்பான முயற்சிகள் பின்தள்ளப்படும்

யுத்த நிறுத்தம் ஏற்படலாம்; சில வேளைகளில் யுத்த நிறுத்தம் மீறப்படலாம்; ஆனால் அரசியல் தீர்வை நோக்கி நாம் படிப்படியாக முன்னேற வேண்டும் என்றார்.

**போரினால்**

த்தில் தேர்தல் கண்காணிப்பாளராக ஈடுபட்டார் வாக்களிப்பில் ஈடுபட்ட வாக்காளர் பலரைத் தாம் நேரில் சந்தித்து வினவியபோது அவர்கள் போரை முடிவிற்கு கொண்டு வந்து விரைவில் சமாதானத்தை அடையவேண்டும் எனத் தெரிவித்தனராம்;

போரினால் ஏற்பட்ட வீண் உயிரிழப்புகளும் பொருளாதார நஷ்டங்களும் மக்களை பெரிதும் பாதித்துள்ளது புதிய அரசிடம் சமாதானத்தை எதிர்பார்த்தே மக்கள் வாக்களித்தனர் என்றார்.


## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
## விஷேட அறிவித்தல்

11-11-94 ஆம் தேதிய பொது நிர்வாக சபை முடிவுக்கு அமைய கூட்டங்களுக்கு வருகை தராதவர்கள் ஆகக் குறைந்தது ஒரு வாரகாலம் நிறுவனம் நடாத்துவதற்கு தடைசெய்யப்படுவர் என்பதை அறியத்தருகின்றோம்.

சகல கோட்ட தலைவர்களும் இம்மாதம் 16 ஆம் தேதி நடைபெறவுள்ள தங்கள் கோட்ட பொதுக் கூட்டத்திற்கு வருகை தராதவர்களின் விபரங்களை உடனடியாக எமது மாவட்ட பணிமனையில் ஒப்படைக்கவும்.

பொதுச் செயலாளர்
யாழ் மாவட்டம்

(சி-10706)


## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தப்பி நாகலிங்கம்

பிறப்பு: 18.07.1922

மறைவு: 13.11.1994

கட்டுவன் ஐயனார் வீதியைப் பிறப்பிடமாகவும் தற்போது நீர்வேலியில் வசித்தவருமாகிய சின்னத்தம்பி நாகலிங்கம் 13-11-94 அன்று அதிகாலை காலமாகிவிட்டார். இவர் பாக்கியத்தின் அன்பு கணவரும் தருமராசா (ஜேர்மன்), செல்வநாயகம் (ஜேர்மன்), தம்பிராசா, பஞ்சலிங்கம், அருளானந்தம் (கனடா), கமலேந்திரன், வனஜா (சுவிஸ்), தனஜா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார், அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14-11-94) காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி வடக்கு மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
நா. பஞ்சலிங்கம்
(மகன்)

(10104)

### சுப்பிரமணியம் சிவக்கொழுந்து

மணல்பாத்தி கரவெட்டியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவக்கொழுந்து 11 - 11 - 94 அன்று காலமானார் இவர் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னத்தம்பி கண்ணையின் மகளும் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை இலட்சுமிப் பிள்ளையின் மருமகளும், சுபத்திரா (U. K.) சுபலட்சுமி, சுமதி (திருமலை இணைந்த பல்கலைக் கழகம்), கண்ணன் (நெதர்லாந்து பல்கலைக்கழகம்), சுரேந்திரன், சுசிக்குமார் (விக்னேஸ்வராக் கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் தாயாரும் சிவபாதம் (சிவம்), சிவானந்தன் (ஜேர்மன்), சிவராசா (U. K) சிவலிங்கம், சிவனேஸ்வரி (ஜேர்மன்), சிவயோகம் (கனடா), சிவமணி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கந்தையா இளையதம்பி ஆகியோரின் மைத்துனியும், நித்தியானந்தம் (U. K.) கணக்காளர்) அவர்களின் மாமியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்
கி. சுப்பிரமணியம்
(கணவன்)

(9855)

### சரவணமுத்து புத்திசியாமணி

(சீமெந்து தொழிற்சாலை ஊழியர் காங்கேசன்துறை)

காங்கேசன்துறை காட்டடைப்பு வீதியை பிறப்பிடமாகவும் தற்போது கரணவாய் தெற்கு அம்மன் கோவிலடி வீதியில் வசித்தவருமான சரவணமுத்து புத்திசியாமணி [தவராசா] 12-11-94 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற சரவணமுத்து அன்னபூரணத்தின் அன்பு மகனும், சந்திரமலர், சந்திரவிமலா ஆகியோரின் அன்பு சகோதரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியை 13-11-94 அன்று நடைபெற்றது இவ் வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அன்புடன் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்,

தகவல்:
திருமதி பூபாலச்சந்திரன் குடும்பம்
சரவஸ்வதி பவனம்,
மட்டுவில் தெற்கு;

(10103)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது